KARUNI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஏப்ரல் - ஜூன் 2019 காலாண்டிதழ் இதழ் - 22

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

## ஆண்டு விழா சிறப்பு மலர்

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

04 கடைசி மூச்சிருக்கும் வரை வலு இருக்கும்...
35 முற்றத்து மல்லிகை





ரூபா 100/=

ISSN 2513-2989

வெளியீடு :
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்


AnnA
1959
சாயிசுகந்தா
பத்திகள்
madhuranga
INCENSE STICKS Rs. 30/=
சுகந்த மல்லி
நறுமண பத்திகள்
துர்க்கா
இது ஒரு அண்ணா தயாரிப்பு
ஐந்து சகாப்தத்திற்கு
மேலாக மக்களின்
அபிமானத்தைப் பெற்றது....
அண்ணா தொழிலகம்
இனுவில் தெற்கு, இனுவில்.

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஏப்ரல்- ஜூன் 2019 | காலாண்டிதழ் | இதழ் – 22

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்**

திரு. க. தர்மசேகரம்

**நிர்வாக ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திரு. செ. பிரிந்தாபரன்
செல்வி. சு. கானப்பிரியா

**இதழ் குழு ஆலோசகர்**

திரு. கணபதி சர்வானந்தா

**வெளியீடு**

**கருவி மாற்றுத்திறனாளிகளின்**
**சமூகவள நிலையம்**
இல. 1166 / 15, அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 4224

## பொருளடக்கம்

எண்ணக்கிண்ணம் – கவிதை - 02
வாருங்கள் நாமும் வடம் பிடிப்போம் - 03
வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 04
ஏ.ஜே. ஞானேந்திரன்
வலைவெளி ஓட்டிசம் (Autism) - 07
பாலபாரதி
செய்திச் சாளரம் - 09
தசரசம் - 11
வலுவிடம் கேளுங்கள் - 28
முற்றத்து மல்லிகை - 29
சிறுகதை ‘கண்கெட்டதுக்கு அப்புறம் சூரிய நமஸ்காரம்’ - 32
வலுதரும் ஜோதிடம் - 35
நயவுரை - 36
எழுதுங்கள் வெல்லுங்கள் - 42
கருவியின் செயற்பாட்டறிக்கை - 37



# ஊனம் என்பது குறையல்ல

சற்றே நிமிர்ந்து பார் நீ எதிலும் சளைத்தவன் இல்லை- என்பதை
நீ படைத்த சாதனைகள் உணர்த்தி நிற்கின்றன
உன்னைப் பார்த்து சிரித்தவர்களை சிந்திக்கச் செய்
இன்னும் உன் படைப்புக்கள் சரித்திரத்தில் தடம் பதிக்கும்

ஊனமுற்றது உன் தவறல்ல என்பதை நீ உணர்ந்திடு
ஊடல் தவிர்த்திடு ஊக்கத்துடன் செயற்படு
மன உறுதியுடன் போராடு சிந்தனையை சிதற விடாதே
சிகரத்தை அடைய சீக்கிரமே புறப்படு

அதிசயப் பிறவியாய் அகிலத்தில் உதித்தாய்
அனைவரும் போற்றிட அழகாய் சரித்திரம் படைப்பாய்
நம்பிக்கையுடன் நடந்திடு சற்றே நகர்ந்தாலும்
சறுக்கி விடுவாய் சளைக்காமல் போராடு சாதனை புரிவாய்

குறை என நினைக்காதே அது குறையாகத்தான் தெரியும்
நிறை என நினைத்தால் நிர்க்கதி மறையும்
முடக்கப்படும் சக்திகளுக்கு எதிராக முன்னே செல்
முதன்மை பெறுவாய் மூவுலகையும் முறியடிப்பாய்

மாற்றிவிடு உன்னை மறந்துவிடு உன் குறையை
உடைத்துவிடு உலகின் முட்டாள் தனத்தை உள்ளத்தில் தோன்றும்
உணர்வுகளுக்கு உயிர்கொடு உதாசினம் செய்யாதே உணர்ந்துவிடு
உன்னை உடைத்தெறி நீ ஊனம் என நினைப்பதை

**சுரேஸ் வினோதினி.**
வ/நெளுக்குளம் கலைமகள்
மகாவித்தியாலயம்.

# வாருங்கள் நாமும் வடம் பிடிப்போம்

கருவி நிறுவனத்தின் 6வது ஆண்டு நிறைவுக் காலப்பகுதியில் வெளிவருகின்ற வலு நிதானமாகத் தன் பணியை செய்து கொண்டு இருக்கின்றது என்கின்ற விடயம் எமக்கு மிகுந்த மன நிறைவைத் தருகின்றது. 6வது ஆண்டு நிறைவில் வாசகர்களாகிய உங்களது கரங்களில் 22வது இதழை மலர்த்து கின்றோம். இது ஒரு குடும்பத்தின் வெற்றி யல்ல. ஒரு சமூகத்தின் வெற்றி. ஒரு சஞ்சிகை யின் பரவுகை என்பது வாசகர் வட்டத்தின் அயராத பங்களிப்பினாலேயே சாத்திய மாகின்றது. இந்தப் பேறு வாசகர்களாகிய உங்களால் வலு சஞ்சிகைக்குக் கிட்டியிருக் கின்றது.

நீங்கள் தருகின்ற ஊக்கம் தொடர்ந் தும் வலுவை வலுவாக நிலை பெற வைப்ப தற்கு உந்து சக்தி யாய் அமைகின்றது. அன்பு உள்ளங்களே வாசகர்களாக மட்டும் நின்று விடாமல் பேனாக்களையும் வலுவுக் காய் கரம் பற்றுங்கள். நாம் அனைவரும் கருவி நிறுவனத்தின் பிரசவமாக இருக்கின்ற வலு சஞ்சிகையின் வளம்மிக்கப் பங்குதாரர் களாக மாறிச் சமூகத்தை வளப்படுத்து வோம்.

**"வாருங்கள் நாமும் வடம் பிடிப்போம்"**


**திரு. க. தர்மசேகரம்**
பிரதம ஆசிரியர்

வலிகளை உரமாக்கி
எழுந்த உலக விருட்சங்கள்


● ஏ.ஜே. ஞானேந்திரன்

# கடைசி மூச்சிருக்கும் வரை வலு இருக்கும்...

> "உடலில் ஏதோ ஒரு வழியில் வலு குறைந்து விடுவதால், உலகமே அஸ்தமித்து விடுவிதில்லை. இந்த நம்பிக்கை இன்று உலகின் பெருந்தொகை யானவர்களுக்கு, ஒரு ஊக்கியாகச் செயற்படு வதால், பல அரிய சதனையா ளர்களாக, இவர்கள் வாழ்நாட்கள் கழிகின்றன."



எனது சுவிஸ் வாழ்க்கையின்போது, திருநாட்களை அண்டிய காலங்களில், நத்தார் வாழ்த்து அட்டைகள் ஆறு, தபாலில் மறக்காமல் தேடிவரும். இதை வாங்கி உதவ விரும்பினால் என்று ஆரம்பித்து, ஒரு வங்கி இலக்கத்தைத் தந்து, அதில் ஒரு சிறுதொகை பணத்தை வைப்பிலிடும்படி கேட்பார்கள். பத்தோடு பதினொன்றாக வரும் வியாபாரத் தந்திரந்தானே இது என்று உங்கள் மனதில் தோன்றலாம். இதை மறக்காமல் வருடாவருடம் அனுப்பி வைப்பது, ஓவியர்களின் ஓர் அமைப்பு. இந்த ஓவியர்கள் அசாதாராண ஓவியர்கள். தமது கால் விரல்களின் இடுக்குகளிலும், வாயிலும் தூரிகைகளை வைத்துக் கொண்டு, ஓவியம் வரையும் அசாதாரண புருஷர்கள். நீங்கள் விரும்பினால் பணம் கொடுக்கலாம். அல்லது நீங்களே வைத்துக் கொள்ளலாம். அடுத்த வருடமும் தொடர்ந்து அனுப்புவார்கள். பணம் செலுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவுமே இல்லை....



M.F.P.A என்பது ஒரு தொண்டு நிறுவனமல்ல. சுயமாக, சம்பாதிப்பதை அடிப்படையாகக் கொண்டு மலேசியாவின் தலைநகரில் இயங்கும் ஒரு நிறுவனம் இது. இந்த நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் வாய், கால்விரல் கொண்டு ஓவியம் வரைபவர்கள். 1956இல் ஆரம்பித்த இந்த நிறுவனம், இன்று வரை, இப்படியான அசாதாரண ஓவியர்கள் பலருக்கு "சோறுபோட்டு" வருகின்றது என்பது யாவரையும் பெருமைப்பட வைக்கும் விடயம். இவர்கள் வாழ்த்து மடல்கள், நாட்காட்டிகள் என்பனவற்றில், ஓவியங்களை வரைந்து தம் உழைப்பை மேம் படுத்திக் கொள்கிறார்கள்.

**அசத்தலான சீன ஓவியர்**

இந்தச் சீன ஓவியர் பெயர் Tang. முடங்கிப் போன இவர் புஜத்தின் நீளம் 10செ.மீற்றர் மாத்திரமே! இரண்டு கைகளிலும் பிறப்புத் தொடக்கமே இவரிடம் காணப்படுவது மூன்று விரல்கள்தான்! உலகம் இருண்டுவிட்டதாக இவர் மூலையில் சோம்பிக் கிடந்து விடவில்லை."உன்னால் முடியும் தம்பி" என்ற உத்வேகம் இவருக்குள்ளும் கனல்விட்டு எரிந்து கொண்டுதான் இருந்தது. மனதில் ஊனம் வேண்டாமே என்று என்று அவர் வீறாப்பாய் செயற்பட்டார். இன்று எழுத்தழகியலில் (Calligraphy) அசத்தலான சாதனையாளராக இருப்பதுடன், சீன முறைப்படி, அழகான ஓவியங்களை தன் வாயாலும் கால்விரல்களாலும் வரைந்து தள்ளுகிறார். தனது சிறுபிராயம் தொட்டே இப்படியான ஓவியங்களை இவர் வரைய ஆரம்பித்து விட்டார். 1999இல் சீனாவிலுள்ள ஓவிய அக்கடமியொன்றில் சிறுவன் ராங் இணைந்து கொண்டான். 4 வருடங்கள் கழித்து, சீன ஓவியப் படிப்பைத் தொடர ஒரு மாஸ்டர் பயிற்சிக்கான அனுமதி கிடைத்துள்ளது. 2005.ல் ஒரு நடிகராகவும், நடனக்காரராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவரை பெய்ஜிங்கின் பிரதான மண்டபம் தங்கப் பதக்கம் கொடுத்து கௌரவித்துள்ளது. நாட்டின் பரவலான தொலைக்காட்சி நிலையங்கள் மூலம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட இவர் பல ஓவியப் போட்டிகள் எழுத்தழகியல் போட்டிகள் என்று பங்குபற்றி 30க்கு மேற்பட்ட தேசிய விருதுகளை வென்றெடுத்துள்ளார். இப்பொழுது இவர் வலுவிழந்தோருக்கான சீனாவின் நுண்கலை அமைப்பின் அங்கத்தவராக இருப்பதோடு, வலுவிழந்தோருக்கான எழுத்தழகியல் அமைப்பிலும் அங்கத்துவம் வகிக்கின்றார். ஜப்பானின் கஞ்சி எழுத்தழகியல், சீனாவின் எழுத்தழகியலிலிருந்து, சிறிய மாற்றங்களைப் பெற்று புதிய தோற்றம் பெற்றது என்ற உண்மை ஒருவேளை உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்க

லாம். சரித்திரரீதியாகப் பார்த்தால் சீன எழுத்துக்கள் ஜப்பானிய எழுத்துக்களை விட தொன்மையானவை. ஜப்பானியர்களும் சீனர்களும் வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தாலும், சீனர்களின் எழுத்து முறையை ஒட்டியே ஜப்பானிய எழுத்து முறை தோன்றியிருக்கின்றது. கி.மு5அல்லது 6ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் சீன எழுத்து முறை அறிமுகமாகி இருக்கின்றது.

உலகெங்கும் பரந்து நிற்கின்ற AMFPA என்பது இன்னொரு உலகளாவிய ஓவிய அமைப்பு. இலாப நோக்கில் நடாத்தப்படும் இந்த அமைப்பில் 76 நாடுகளிலுள்ள 820 வாய் . காற்பாத ஓவியர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். இதில் 143 பேருக்கு முழுமையான அங்கத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. (இது 2016இல் எடுத்த ஒரு கணக்கு) இந்த அமைப்போடு இணைவதற்கான ஒரு நிபந்தனையாக இவர்கள் தமது கைகளை ஒழுங்கான முறையில் இயக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அப்படித் திறமை இல்லாதிருந்தும். இவர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அமைப்பு இவர்களை உள்வாங்கிய நாள் தொடக்கம், மரணம் வரை. மாதாந்த ஊதியத்தை வழங்கி வருகின்றது.

இவர்களது பிரதான உற்பத்தி நத்தார் அட்டைகள், நாட்காட்டிகள். வருடாவருடம் 48 நாடுகளுக்கு வாழ்த்து மடல்களை அனுப்பி வைக்கிறார்கள். சுவிஸ் நாட்டில் இன்னொரு தனிநாடாக இருக்கும் லிக்டன்ஸ்டையினில் தான் இந்த அமைப்பு இருக்கின்றது. 1957இல் அமைக்கப்பட்ட இந்த நிறுவனமே, சுவிஸ் நாட்டில் இருந்தபோது எனக்கு வாழ்த்து மட்டைகளை அனுப்பியிருக்க வேண்டும் என்று இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன்....




*மனித சமூக வரலாற்றில் சாட்சிகளின் முக்கியத்துவம் அளப்பரியவை. ஒரு சம்பவம் நிரூபணமாவதற்கு அல்லது ஒரு விடயம் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுவதற்கு சாட்சிகளின் துணையை மனித சமூகம் என்றுமே வேண்டி இருக்கின்றது.*

*சாட்சிகள் என்ற இந்தப் பகுதி கருவி நிறுவனத்தின் பணிகளின் பால் ஈர்க்கப்பட்டும், கருவியின் சமூகப் பணிகளால் பயன் பெற்றும் நிறைவு கண்ட மனிதர்களின் வெளிப்பாடுகளாய் வளர இருக்கின்றது.*

## சாட்சி .01

**மாதன் மகேந்திரன்**

மாதன் மகேந்திரன் அவர்கள் அச்சுவேலியில் 1961 ம் ஆண்டு வைகாசி மாதம் 21 ம் திகதி மாதன் தங்கம் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். பிறப்பிலிருந்தே பார்வைப்புலனை இழந்தவர். பாடசாலை கல்விபெறும் வாய்ப்பை இழந்திருந்தபோதும் தனது அனுபவத்தை விசாலிக்கச்செய்ததன் ஊடாக உலகை அளந்தவர். வானொலி நிகழ்ச்சிகளோடு அவருக்கு இருந்த பரீச்சியம் இவரது அறிவுத்திறனை அதிகரிக்கச் செய்தது.

ஒரு நல்ல பாடகன் ஒரு நல்ல கவிஞன் என்ற பரிமாணங்களை தனக்குள்ளே ஒளித்து வைத்துக் கொண்டு ஒதுங்கியிருந்த மாதன் மகேந்திரன் அவர்கள் கருவிநிறுவனத்திற்கு ஒரு சேவைநாடியாக வந்து சேவையாளனாக தன்னை உயர்த்திக் கொண்டவர். கருவிநிறுவனத்தின் 5ம் ஆண்டு நிறைவுவிழாவையொட்டி திரு.மாதன் மகேந்திரன் அவர்களை இயற்புலமையாளர் என்ற பட்டம் வழங்கி கௌரவிப்பதில் கருவி நிறுவனம் பேருவகை கொள்கிறது.

[வளு 21 இதழ் தொடர்ச்சி...]

பாகம்- 05



# வலைவெளி

## சென்சரி பிரச்சினைகள் (Sensory Problems)

# ஓட்டிசம்

பாலபாரதி

### சென்சரி பிரச்சனைகளால் குழந்தைகளின் நடவடிக்கையில் ஏற்பட சாத்தியமுள்ள மாற்றங்களும், அதற்கு சில தீர்வுகளும்:

1. மிகச் சில உணவு வகைகளை மட்டுமே உண்பது: சில வகை உணவுகளின் கட்டமைப்பு (கொழ கொழப்புத் தன்மை, கரடு முரடாக இருப்பது etc) அக்குழந்தைகளுக்கு பிடிக்காது போகலாம். முதலில் அவர்களுக்குப் பிடித்த வகையிலேயே உணவுகளை கொடுக்க வேண்டும். மெல்ல மெல்ல மற்ற வகை உணவுகளுக்கு அவர்களது வாயை பழக்க வேண்டும்.

2. வாயின் மூலம் செய்யக் கூடிய சோப்பு நுரைக்குமிழ்(பபிள்ஸ்) விடுவது, ஊதல் கொண்டு ஊதுவது போன்ற செயல்களை ஊக்குவிக்கலாம்.

3. உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்களையும் மெல்லுவது / கடிப்பது: இப்படிச் செய்வதில் அவர்களின் சென்சரி தேவைகள் குறைவதாக சில குழந்தைகள் உணர்வர். இத்தகைய குழந்தைகளுக்கு ரப்பரில்லாத ட்யூப்கள், ஸ்ட்ராக்கள், கடிக்க சிரமமான உணவுகள் போன்றவற்றை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தரலாம். இவை அதே சென்சரி தேவையை பூர்த்தி செய்யும். மெல்ல மெல்ல உணவல்லாத பொருட்களை கடிப்பதும் நிற்கும்.

4. மலத்தில் விளையாடுவது - அந்த கட்டமைப்புத் தன்மை அக்குழந்தைக்குப் பிடித்தமானதாக இருக்கலாம். அதனால் அதை கையில் எடுத்து சில குழந்தைகள் விளையாடுவார்கள். அந்த நாற்றமும் அதற்கு உறுத்தாமல் போயிருக்கலாம். ஜெல்லி போன்ற தன்மையுள்ள மாற்றுப் பொருட்களை கொடுத்து விளையடப் பழக்க வேண்டும்.

5. சில வகை உடைகளை அணிய மறுப்பது - அந்த உடைகளின் இழையமைப்பு பிடிக்காது போவது அல்லது அந்த ஆடை தோலில் உரசுவது பிடிக்காமல் போகலாம். சில குழந்தைகள் புதுத் துணிகளை அணிய மறுக்கலாம். ஆடைகளை நன்கு பரிசோதித்து அதிலிருக்கும் லேபிள்களை நீக்க வேண்டும். அல்லது புதுத் துணிகளை கூட சில முறை துவைத்து பின் அணிய வைக்கலாம்.

6. தூங்குவதில் சிரமம் - அவர்களது கேட்டல் மற்றும் பார்த்தல் உணர்வுகளை நிறுத்துவதில் சிரமம் இருக்கலாம். பாடல் கேட்டுக் கொண்டே தூங்கும் முறையில் வெளி


சத்தங்களை தவிர்க்கலாம். ப்ளைண்டர் போன்றவற்றின்மூலம் கண்களை மூட வைக்கலாம்.


7. வகுப்பறையில் கவனிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் - நிறைய கவனத்தை கலைக்கும் விஷயங்கள் இதற்கு காரணமாக இருக்கலாம். மணி அடிப்பது, பேச்சு சத்தம், பெஞ்ச், நாற்காலிகள் தள்ளப்படும் ஓசை போன்ற சத்தங்களோ, சில மனிதர்கள், படங்கள் போன்றவற்றின் மூலம் ஏற்படும் கவனச் சிதறலோ இதற்கு காரணமாகலாம். கதவு, மற்றும் ஜன்னலிலிருந்து தொலைவிலிருப்பது போல், அக்குழந்தைகளை அதிகம் பாதிக்காத இடத்தில் அமரச் செய்யலாம். கனமான கோட் போன்றவற்றை அணிந்து கொள்ளச் செய்யலாம். சாதாரண பெஞ்ச், அல்லது நாற்காலிக்கு பதில் காற்று நிரம்பிய பந்து போன்ற இருக்கைகளில் அமரச் செய்யலாம். மேலை நாடுகளில் இம்முறை அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது போன்ற விஷயங்களை பெற்றோர், பள்ளி ஆசிரியர்கள், ஆக்குபேஷனல் தெரபிஸ்ட், மியூசிக் தெரபிஸ்ட் போன்றோரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு கட்டிடத்திலும் ஊனமுற்றோர் தங்களது சக்கர நாற்காலியில் பயணிக்க வசதியாக சாய்வு மேடை அமைத்துக் கொடுப்பதைப் போலவே மனரீதியிலான சிக்கல்கள் கொண்ட இக்குழந்தைகளுக்கும் ஏற்றவாறு நாம் நமது வீடு மற்றும் பள்ளிச் சூழல்களை சற்றே மாற்றியமைக்க முன்வர வேண்டும்.

இச்சிறு மாற்றங்கள் அக்குழந்தைகளை இயல்பான வாழ்வுக்கு மீட்டு வரும். வளர்ந்த பின்னர் அவர்களே இத்தேவைகளை முறையான வழியில் சமாளித்துக் கொள்ளவும் முடியும். (சென்சரி பிரச்சனைகள் முடிவுற்றது.)

அடுத்து ஆட்டிசக்குழந்தைகளின் உணவு பழக்கவழக்கங்களில் பற்றிய GFCF DIET குறித்துப் பார்ப்போம்.






# செய்திச் சாரம்



## அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு 5000.00 ரூபாவாக அதிகரிப்பு

நிதியமச்சர் மங்கள சமர வீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அங்கவீனமுற்றவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை 3000.00 ரூபாயிலிருந்து 5000.00 ரூபாய் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையானது இத்தொகையினைப் பெற்றுக் கொள்ளும் அங்கவீனர்களுக்கு பயனுடையதாக அமைகிறது எனும் இத் தொகையினை பெற்றுக் கொள்ளாத நிலையிலிருக்கும் அங்கவீனர்களுக்கு இதனை வழங்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அவர்களும் இப்பயனினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## வியக்க வைத்த விசேட தேவையுடைய மாணவிகள்

2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் விசேட தேவை உடைய இரு மாணவிகள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். எஹளியகோட மத்திய மகா வித்தியாலய மாணவியான ரக்ஷ்மி இமேக்ஷா குணவர்தன என்பவர் சாதாரண தரப் பரீட்சையில் 8A,B சித்தியினைப் பெற்று அனைவரையும் வியக்க வைத்துள்ளார். இம் மாணவி இரு கைகளையும் ஒரு காலினையும் இழந்த நிலையில் பிறந்தார். ஆனால் நம்பிக்கையுடன்

கல்வியினைத் தொடர்ந்த இவர் காலினால் எழுதக் கற்றுக் கொண்டார். கடந்த வருடம் இடம் பெற்ற சாதாரண தரப் பரீட்சையினையும் காலினாலே எழுதி அனைவரும் வியக்கத்தக்க வகையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்று சாதனையினைப் பதிவு செய்துள்ளார். இவர் ஏற் கனவே ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற் றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எதிர் காலத்தில் வணிகத்துறை நிபுணராக வர வேண்டும் என்பதே தனது இலட்சியம் என்கின்றார் ரக்ஷ்மி இமேக்ஷா.

மேலும் போரினால் தனது ஒரு காலை இழந்த கிழவிகுளம், பாலமோட்டையைச் சேர்ந்த மாணவியான செல்வி ச.பிரியங்கா என்பவர் குறித்த இப் பரீட்சையில் 6A,B,C பெறுபேற்றினைப் பெற்று சாதனை படைத்துள்ளார். வலு இழந்த நிலையிலும் தங்களின் வலுவான மன உறுதியோடு கல்வி கற்று சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ள இம் மாணவிகளுக்கு வலு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

---

# மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகு வசதிகளினை உரிய முறையில் வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு



மாற்றுத்திறனாளிகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சென்று தமது தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அணுகு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் என 2006 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் கூறப்பட்டுள்ளது. இச் சட்டங்களுக்கு அமைவாக மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகு வசதிகளை வழங்குமாறு உயர் நீதிமன்றம் 18 ஏப்ரல் 2019இல் கூறியுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்குள் பிரவேசிப்பதற்கு போதிய வசதிகள் வழங்கப்படாததால், அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள உயர் நீதி மன்றம், உடனடியாக அவர்களுக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சமூக நலன்புரி சமூக சேவைகள் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மேல் மாகாணம் மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அமைச்சுகளுக்கே உத்தரவு இடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காத நிறுவனங்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து, தண்டனை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

கலாநிதி அஜித் பெரேராவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மனு பிரசன்ன ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதியரசர்களால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரருக்கு 50,000 ரூபா வழக்கின் செலவுத் தொகையை செலுத்துமாறும் இதன்போது உயர் நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளது.




தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்

# தசரசம்

இலக்கியம் | இலங்கை | உலகம் | விண்வெளி | விளையாட்டு | மருத்துவம் | தாவரம் | விலங்கு | பிரபலம் | அதிசயம்

## 01. இலக்கியம்

### இராமர் கதை

**(கடந்த இதழ் தொடர்ச்சி...)**

மறுநாள் காலை பல அஸ்திர வித்தைகளை முனிவர் இராமனுக்கு அருளினார். பிறகு மூவரும் அங்கிருந்து புறப்பட்டு செல்கையில் ஒரு சோலை தென்பட்டது இச் சோலை யாது என இராமன் விஸ்வாமித்திரரிடம் கேட்க, அதற்கு முனிவர் இதுதான் "சித்தாஸ்ரமம்" எனப்படும் இடமாகும். வேத முதல்வனான திருமால், முன்பு தவம் செய்த இடம் இது என்றார் விஸ்வா மித்திர முனிவர். அத்துடன் காசிபர் எனும் முனிவர் தன் பத்தினியான அதிதியோடு திரு மாலைக் குறித்துத் தவம் செய்தார். அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காக்க தாங்கள் எமக்கு மகனாக அவதரிக்க வேண்டுமென்று வரம் கேட்டார். இதன் பயனாக திருமால் அதிதி வயிற்றில் பிறந்தார். இவருக்கு வாமனன் என்று பெயரிட்டனர். அப்படி காசிப முனிவர் தவம் செய்த இந்த சித்தாஸ்ரமம், நான் யாகம் செய்ய தேர்ந்தெடுத்த இடமாகும் என்றார் விஸ்வா மித்திர முனிவர். "இராமா! நான் இந்த இடத்தில் இப்போது யாகத்தைத் தொடங்குகிறேன். நீங்கள் இருவரும் விழிப்போடிருந்து காவல் காத்துக் கொண்டிருங்கள்" என்று சொல்லிவிட்டு விஸ்வாமித்திர முனிவர் வேள்வியைத் தொடங்கினார்.

ஆறு நாட்கள் வேள்வி நடைபெற்றது. அதுவரை கண்ணை இமை காப்பது போல இராம லக்ஷ்மணர்கள் வேள்வியைக் காத்துகொண்டிருந்தபோது அரக்கர்கள் ஆகாயத்திலிருந்து அம்புகளை இவர்கள் மீது எய்தனர், ஈட்டிகளை எறிந்தனர், நீரையும், நெருப்பையும் பொழிந்தனர், பெரிய பாறைகளைப் பெயர்த்து வீசினர், வசைச் சொற்களால் திட்டினர், அதட்டினர், மழுவாயுதத்தை எறிந்தனர், இப்படிப் பல கொடிய மாயச் செயல்களைச் செய்தனர். அவர்கள் வீசிய ஆயுதங்கள் வான மண்டலத்தையே மூடி மறைத்தன. யாக மந்திரங்கள், அந்த அவற்றை அருகில் வர முடியாமல் தடுத்தன.

தூரத்தில் நின்றுகொண்டே இத்தகைய தீயசெயல்களைச் செய்தனர். அரக்கர் சொரியும் எதுவும் யாக குண்டத்தில் விழாமல் அம்புகளால் இராமன் ஒரு சரக்கூடம் அமைத்தான்.

முனிவர்கள் இராமனிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களுக்கு அபயம் அளித்தான். பின்னர் இராமன் தன் வில்லை எடுத்து அந்த அரக்கர்களை நோக்கி பாணங்களைத் தொடுக்கலானான். இராமன் விட்ட ஓர் அம்பு மாரீசனை கடலில் கொண்டுபோய் போட்டது. மற்றொரு அம்பு சுபாஹுவை எமனுலகுக்கு அனுப்பியது. எஞ்சிய அரக்கர்கள் அஞ்சி அலறி ஓடினர். எனினும் இராமனுடைய வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகள் அவர்களைத் துரத்திச் சென்று கொன்றுவிட்டுத் திரும்பின. இதனால் தேவர்கள் இராமனைத் வணங்கினர். முனிவரின் யாகமும் அரக்கர்களின் இடையூறின்றி இனிதே நிறைவுற்றது. ராமனை விஸ்வாமித்திர முனிவர் புகழ்ந்து பாராட்டினார்.

இராமன் முனிவரிடம் "வேள்வி முடிந்துவிட்டது. இனி நான் என்ன செய்ய வேண்டும்" என வினவ, முனிவர் "ஶ்ரீ ராமா! நீ செய்வதற்கு அரியது என்று ஒன்றுமே இல்லை. எனினும் உன்னால் முடிய வேண்டிய காரியங்கள் சில உண்டு. அவற்றைப் பிறகு பார்க்கலாம். இப்போது முதலில் மிதிலைக்குச் செல்வோம். அங்கு ஜனக மகாராஜன் செய்யும் வேள்வி யைக் காண்போம்" எனக் கூறி இருவரையும் அழைத்துசென்றார். அவர்கள் சோனை நதிக்கரையிலிருந்த சோலையைக்கடந்து சென்று கங்கைக் கரையை அடைந்தனர். அங்கிரு ந்து விசாலை நகர்வழியே விதேக நாட்டினை அடைந்தனர்.

இந் நாட்டின் தலைநகரம் தான் மிதிலை. இந் நகரை நோக்கி விஸ்வாமித்திர முனிவரும், இராம இலக்குமணரும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப் பாதையில் ஒரு கருங்கல் உரு ஒன்றைக் கண்டனர். அதனருகே இராமன் சென்ற போது இராமனின் திருவடித்துகள் அதன் மீது பட்டதும், அக் கல் ஓர் பெண்ணானது. அவள் இராமன் பாதங்களில் வணங்கி னாள். தன் கால் துகள் பட்டதும் ஒரு கல் பெண்ணாகி எழுந்ததைப் பார்த்த இராமன் ஆச்சரி யத்துடன் முனிவரைப் பார்த்து இவள் யார் எனக் கேட்க அவர் இராமா! இவள் கௌதம முனி வரின் மனைவியான அகலிகையாவாள். ஒரு முறை இந்திரனுக்கு அகலிகை மீது மோகம் ஏற்பட்டது. இதனால் இவன் ஒரு நாள் இரவு முனிவரை ஆசிரமத்தை விட்டு வெளி யேற்றும் பொருட்டு சேவல் போல கூவினான் அது கேட்ட முனிவர் பொழுது விடிந்துவிட்டது போலி ருக்கிறது என நினைத்து ஆற்றங்கரைக்கு ஸ்நானம் செய்வதற்காக சென்றார். அந்த நேரம் இந்திரன் முனிவரின் வேடத்தில் ஆசிரமத்துள் நுழைந்தான்.



ஆற்றுக்குச் சென்ற முனிவன், அது அகாலமென்று உணர்ந்து, ஆசிரமத்துக்கே திரும்பிவந்தார், தன்னை இந்திரன் ஏமாற்றிவிட்டதை உணர்ந்தார். அவன் மீது அளவிலாத கோபம் கொண்டார். பயந்த இந்திரன் பூனை வடிவம் எடுத்துக் கொண்டு ஓட முனைந்தான். அகலிகை நடந்தவற்றை அறிந்து நாணத்தால் செயலற்று நின்றாள். முனிவர் இந்திரனைத் தீயெனப் பார்த்து, இந்த இழிச் செயலைச் செய்த உனக்கு உடலெங் கும் ஆயிரம் பெண் குறிகள் தோன்றட்டும் என சபித்தார். அகலிகையைப் பார்த்து, வேசிபோல இருந்த நீ கல்லாய் மாறிவிடுவாய் எனவும்

சபித்தார். அகலிகை முனிவரிடம் கெஞ்சி முறையிட்டு பிழை பொருத்தருள்வீர் எனக்கு சாப விமோசனம் அருள்வீராக என வேண்டினாள். அதற்கு முனிவர் "என்று தசரத குமாரன் இராமனுடைய பாத துகள் உன்மீது படுகிறதோ அப்போது பெண் உருக் கொள்வாய்" என்று சாப விமோசனமளித்தார். தேவர்கள் பணிந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்திரன் உடலில் ஆயிரம் குறிகளுக்குப் பதிலாக, ஆயிரம் கண்களாக மாற்றி அருளினார் என்று அகலிகையின் வரலாற்றினை இராமருக்கு கூறினார் விஸ்வாமித்திர முனிவர். பிறகு இவர்கள் கௌதம முனிவரிடம் அகலிகையை அழைத்துச் சென்று அவரிடம் ஒப்படைத்தனர். அப்போது இராமபிரான் கௌதம முனிவரிடம், மனத்தாலும் தவறு செய்யாத இந்த மாதை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்ள, கௌதமரும் அவளை ஏற்றுக் கொண்டார்.

(தொடரும்)

## 02. படைப்புழு



**உயிரியல் வகைப்பாடு**

| | | |
|---|---|---|
| திணை | : | விலங்கு |
| தொகுதி | : | கணுக்காலி |
| வகுப்பு | : | பூச்சி |
| வரிசை | : | Lepidoptera |
| குடும்பம் | : | Noctuidae |
| பேரினம் | : | Spodoptera |
| இனம் | : | S. frugiperda |

இருசொற் பெயரீடு

Spodoptera frugiperda

வீழ்ச்சி படைப்புழு, வரத்துப் படைப்புழு, வெளிநாட்டு ராணுவப் படைப்புழு ( fall armyworm) (Spodoptera frugiperda) என்பது லெபிடோப்டர் வரிசையைச் சேர்ந்தது. படைப்புழு என்ற சொல்லானது பல இனங்களைக் குறிப்பதாக இருக்கலாம். இதன் அறிவியல் பெயரானது ஃப்ஷரூஜ்பெர்டா (frugiperda) என்ற இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் இலத்தீன் மொழியில் இழந்த பழம் என்பது ஆகும், ஏனென்றால் இது பயிர்களை அழிப்பதால் இப்பெயர் சூட்டப்பட்டது. தீமை செய்ய கூடிய வகையைச் சேர்ந்த புழுக்களிலே மோசமானது தான் ஃப்ஷரூஜ்பெர்டா (frugiperda) என்ற இந்த படைப்புழு.

புழுவிலிருந்து அந்துப்பூச்சியாக உருமாறியவுடன் இனச்சேர்க்கையில் ஈடுபடும் இவை ஒரேசமயத்தில் 200-300 முட்டைகளை இடும் தன்மையைக் கொண்டவை. சிலநாட்களில் முட்டையிலிருந்து வெளிவரும் படைப்புழுக்களுக்கு 16 கால்கள் இருப்பதுடன் அடுத்த இரண்டு வாரங்களில் 3மில்லி மீற்றர் என்ற அளவிலிருந்து 2 சென்ரி மீற்றர் நீளத்துக்கு வளர்கிறது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் தன்னாலான அளவுக்கு அதிகபடியான சோளம் உள்ளிட்ட தனக்கு விருப்பமான பயிர்களை உட்கொண்டு பிறகு மண்ணுக்குள் செல்கிறது. மண்ணுக்குள் அடுத்த பத்து நாட்கள் இருக்கும் அப்போது அவற்றின் கால்களின் எண்ணிக்கை ஆறாக

குறைகின்றன. பின்னர் இவை அந்துப் பூச்சிகளாக வெளிவரு கின்றன.

மண்ணுக்குள் இருந்து வெளியே பறந்துவரும் அந்துப் பூச்சிகள் புதிதாக இரண்டு இறக் கைகளும் கண்களும் பெற்றுக் கொண்டு ஆண் பெண் அந்துப் பூச்சிகளாக உருவெடுக்கின் றன, பெண் அந்துப்பூச்சிகள் இனச்சேர்க்கையை மேற்கொள் ளும் எண்ணத்துடன் ஒருவித வாசனைத்திரவத்தை சுரக் கின்றன. இதனால் ஆண் அந் துப்பூச்சிகள் அதைத் தேடிச் சென்று இனச்சேர்க்கையில் ஈடு படுகின்றன. இதனால் ஒரு அந் துப்பூச்சி ஒரே சமயத்தில் 200-300 முட்டைகளை இலை களில் இட்டு அதை ஒரு வித திர வத்தைகொண்டு மூடிப் பாது காக்கின்றன. ஓரிரு நாட்களில் முட்டைகளில் இருந்து பச்சை நிற இளம்புழுக்கள் வெளிவந்து. இலைகளில் உள்ள பச்சை யத்தை உண்ணும். ஒரு



வேளை பெண் அந்துப் பூச்சிகள் இனச்சேர்க்கையில் ஈடுபடமுடியவில்லை என்றால் சில நாட்களில் அது உயிரிழந்து விடுகிறது

வயதுக்கு வந்த ஒரு அந்துப் பூச்சியானது (ஒரு இறகு முனை யில் இருந்து மறு இறகு முனை வரை) 32 முதல் 40 மிமீ வரையான அளவைக் கொண்ட தாக இருக்கும். ஆண் பூச்சிகளின் இறக்கைகளின் நுனிப்பகுதியில் முக் கோண வடிவ வெள்ளைப் புள்ளிகள் காணப்படும் பெண் பூச்சிகளுக்கு அவ்வாறு இருக்காது. இவை ஆயி ரக்கணக் கான கிலோமீட்டர் பறக்கும் ஆற்றல் வாய்ந்தவை.

அதிக வருமானத்தைப் பெற்று குறுகிய காலத்தில் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மண்ணின் வளத்தையும் விவசாயத்தின் எதிர்காலம் பற்றியும் கவலைப்படாமல் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாரித் தெளித்தவர்களின் செயற்பாடே படைப்புழுக்களின் படையெடுப்பிற்கு காரணமென்று கூறப்படுகிறது. ஆனால் அந்த படைப்புழுக்களின் தாக்கம் இயற்கை முறையில் பயிர் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளின் பயிர்களுக்கு எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இப் புழுக்களை விவசாயிகள் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப வேறுபட்ட பயிர் வகைகளை, பயிரிடுவதன் மூல மாகவும் ,வேப்பம் புண்ணாக்குகளை நிலத்தில் இடுவதன் மூலமாகவும் கட்டுப்படுத்தலாம். படைப்புழுக் கள் உள்ளிட்ட பல்வேறு தீமைசெய்யும் புழுக்கள், பூச்சிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வரம்பு பயிர் கள் ,வேலிச் செடிகளை வளர்த்தல் சிறந்தது.

குறிப்பாக சோளத்தை தாக்கி, சேதப்படுத்தும் இப்புழுக் களை இரசாயன கிருமி நாசினிகளைப்பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியாதுள்ளது. ஏனெனில் இவை சோளத் தினுள் உட்புகுந்து அவற்றை உண்ண அந்தக் கழிவுகள், புழு சென்ற பாதைகளை அடைத்துக் கொள்வதால், பூச்சிக் கொல்லிகளால் புழுக்களை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இரவில் மட்டுமே அட்டகாசத்தில் ஈடுபடும் படைப் புழுக் களை மின் விளக்குகளை பயன்படுத்தி கட்டுப் படுத்த லாம். மேலும் அந்துப்பூச்சிகள் இனச் சேர்க்கைக்கு தயாராகும் போது வெளியிடும் பெரோ மோன் எனும் திர வத்தை செயற்கையாக வெளிப்படுத்தி ஆண் அந்துப் பூச்சிகளை ஏமாற்றி அவற்றை வரவழைத்து கட்டுப் படுத்தலாம். இப்படியான பல வழிமுறைகள் ஊடாக படைப்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.



## 03.சுவிற்சர்லாந்து




- பரப்பளவு – 41285 சதுர கி.மி
- சனத்தொகை – 7.7 மில்லியன் (2009 கணக்கெடுப்பின் படி)
- தலைநகரம் - பேர்ன்
- பிரபல நகரங்கள் - ஜெனீவா, சூரிச்
- தேசிய மொழிகள் - ஜேர்மன், பிரெஞ், இத்தாலியம், உரோம்
- நாணயம் - சுவிஸ் பிராங்க் (CHF)
- அழைப்புக் குறி – 0041
- சுதந்திர தினம் - ஆகஸ்ட் 01
- மாநிலங்கள் - 26
- மொத்த உள்நாட்டு உற்பத்தி - $ 264.1பில்லியன் (2005 கணக்கெடுப்பின்படி)


ஐரோப்பா கண்டத்திலுள்ள அபிவிருத்தி அடைந்த அழகிய ஓர் நாடு தான் சுவிஸர்லாந்து. இதன் எல்லைகளாக வடக்கே ஜேர்மனி, கிழக்கே ஒஸ்ரியா மற்றும் விக்டன்டைனும், தெற்கே இத்தாலி, மேற்கே பிரான்ஸ் ஆகியன காணப்படுகின்றன.

1848 ம் ஆண்டு ஒரு சமக்ஷ்டிக்கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பிற் கமைய இந் நாட்டின் நிர்வாகம் பரிபாலனம் செய்யப்படுகின்றது. இவ் யாப்பானது 1891, 1999 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சீர் திருத்தங்களுக்களுக்கமைய இன்று இரு அவை நாடாளுமன்றம், கூட்டமைப்பு ஆட்சிக்குழு, கூட்டமைப்பு நீதிமன்றம், என்பனவற்றைக் கொண்ட கூட்டாட்சி நாடாக விளங்குகிறது.

இந் நாடானது உலகப் போர்களினால் காயப்படாத நாடாகவும் உலக ஸ்தாபனங்களான செஞ்சிலுவைச் சங்கம், உலக வர்த்தக அமைப்பு ஒன்றினதும் தலைமைப்பீடம் என்பன வற்றை கொண்ட நாடாகவும் விங்குகின்றது. சுவிஸர்லாந்து 2002 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையிலும் 1963 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திலும் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டது.

சுவிஸ்லாந்தில் அறிமுகமில்லாத இருவர் சந்திக்கும் சமயத்திலும் நேராகப் பார்த்து கைகுலுக்கும் வழக்கத்தை கொண்டுள்ளனர்.

## 04. மாரடைப்பு




இதய தசைகளுக்கு தேவையான உணவையும், ஒக்சிஜனையும் எடுத்துச் செல்ல மூன்று முக்கிய ரத்தக் குழாய்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் இதயத்தின் வெவ்வேறு பாகங்களுக்கு ஒக்சிஜன் கலந்த ரத்தத்தை எடுத்து செல்கின்றன. இந்த ரத்தக்குழாய்களின் ரத்த ஓட் டத்திற்கு தடையாக முதலில் சிறியதாக தடைக்கற்கள் போல அடைப்புகள் ஏற்படுகின்றன. சில காரணங்களால்

இத்தடை கற்கள் பெரிதாகி உடைந்து, அதன்மேல் ரத்தம் உறைந்து ரத்தக்குழாயை முழுமையாக அடைத்து விடுகிறது. இதனால் இந்த இரத்தக் குழாய் மூலம் ரத்தத்தைப் பெறும் இதயத்தின் தசைப் பகுதி ஒக்ஸிஜனும் ஊட்டச் சத்துகளும் கிடைக்கப் பெறாததால் செயலிழக்கிறது. இதுவே மாரடைப்பு எனப்படுகிறது.

உயர் ரத்த அழுத்தம், அதிகக் கொழுப்புச் சத்து, சர்க்கரை நோய், புகைபிடித்தல், மன அழுத்தம் போன்றவற்றால்கூட ரத்த நாளத்தின் உட்சுவர் பாதிக்கப்படுகிறது. உட்சுவர் கரடு முரடாகி, அதன் மீது ரத்தத்தில் மிதக்கும் கொழுப்புத் திவலைகள் படிந்துகொண்டே வரும். ரத்த ஓட்டத்துக்கான பாதை குறுகலாகி, ரத்த ஓட்டம் தடைபடும். பிறகு இதய நாளத்தில் விறைப்பு அல்லது உறைகட்டி ஏற்பட்டால், ரத்த ஓட்டம் முழுவதுமாகத் தடைபடும். இதயத் தசைக்கு ரத்த ஓட்டம் தடைபடுவதால், அவை செயலிழக்கின்றன.

புகைபிடித்தல், அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், அளவுக்கு அதிகமானக் கடின உழைப்பு போன்றவற்றால். இது ஏற்படலாம். அடைப்பு அதிகமாகும்போது, இறுக்கம் அல்லது தீவிர மாரடைப்பு ஏற்படுகிறது. கடுமையான மார்பு இறுக்கம் போன்ற வலி 15 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கும். மார்பு வலியுடன் உடல் எங்கும் திடீர் வியர்வை, மூச்சுத்திணறல், வாந்தி, பல வீனம், தலைச்சுற்றல், மயக்கம், வேகமான நாடித்துடிப்பு ஆகியனவும் ஏற்படலாம். இவ்அறிகுறகுறிகள் இல்லாமலும் மாரடைப்பு ஏற்படுவதும் உண்டு.

உலக அளவில் ஏற்படும் இயற்கை மரணங்களில் 12 முதல் 15 சதவிகிதம் பேர் மாரடைப்பால் இறந்து போகிறார்கள். அவர்களில் லட்சத்தில் ஒருவர் இளம் வயதினர் என்பது குறிப்பிடத்தக்கது.



இதய வால்வுகளில் பிரச்சினை, இதயச் செயலிழப்பு உள்ளிட்ட சில காரணங் களாலும் மாரடைப்பு உண்டாகிறது. வீட்டில் யாருக்காவது இதயப் பாதிப்பு இருந்தாலோ, மாரடைப்பால் யாரேனும் சிறுவயதிலேயே இறந்து போயிருந்தாலோ வீட்டிலுள்ள அனைவருமே ஒருமுறை இசிஜி சோதனை செய்துகொள்வது நல்லது. தவிர விளையாட்டுத் துறையில் இருப்பவர்கள் தங்களது இதயம் ஆரோக்கியமாக இருக்கிறதா என்று சோதனை செய்துகொள்வது நல்லது. எந்தப் பயிற் சியில் ஈடுபட்டாலும் படிப்படியாகத்தான் செயல் பாடுகளை அதிகரிக்கவேண்டும். எடுத்த துமே பல கிலோமீட்டர் தூரம் ஓடுவது, வெயிட்டான பொருள்களைத் தூக்கி பயிற்சி செய்வது போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும்.

பள்ளி, கல்லூரிகளில் பொழுதுபோக்குக் காக விளையாடும் மாணவர்களுக்குப் பட படப்பு, மூச்சுத்திணறல், மயக்கம், நெஞ்சுவலி போன்ற பாதிப்புகள் இருந்தால் விளையாட்டில் ஈடுபட அனுமதிக்கக் கூடாது. அதேபோல, பெற் றோர் அல்லது தங்களது பரம்பரையில் யாருக்காவது

சிறுவயதிலேயே மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போயிருந்தால் அவர்களும் இந்த விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள்.



மேலை நாடுகளில் விளையாட்டு வீரர்கள் விளையாடச் செல்வதற்கு முன் அவர்களை முழுமையாகப் பரிசோதனை செய்வார்கள். இங்கே அதற்கான வாய்ப்புகளும், சாத்தியங்களும் மிகவும் குறைவு. அதைச் சரிசெய்ய வேண்டும்.

"அரித்மியாஸ்" என்று சொல்லப்படும் இதயப் படபடப்பு காரணமாகப் பலருக்கு மூளைக்குச் செல்லவேண்டிய ரத்தம் சரியாகச் செல்லாமல் நினைவிழப்பு ஏற்பட்டு, அதிலிருந்து உடனடியாக மீள இயலாமல் மரணம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளில் பள்ளி, கல்லூரி, பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள் போன்ற பொது இடங்களில் "ஏ.ஈ.டி" (Automated External Defibrillators) எனப்படும் முதலுதவி கருவி இருக்கும். நின்றுபோன இதயத் துடிப்பை மீட்டுருவாக்கம் செய்ய இது உதவும். நம்நாட்டிலும் இதுபோன்ற வசதிகளைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் மேம்படுத்த வேண்டும்.

---

## 05. கரும்பு



சுமார் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தென் பசிபிக் தீவுகளில் கரும்பு முதல் முறையாகப் பயிரிடப்பட்டது புல் இனத்தைச் சேர்ந்த தாவரமான கரும்பின் அறிவியல் பெயர் சக்கரம் ஆபிசினேரம். தென் ஆசியாவில் சூடான வெப்பமண்டல பகுதிகளில் வளரக்கூடிய தாவரம் ஆகும். உலகெங்கும் 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 20 மில்லியன் ஹெக்டேர்களில் வணிகப் பயிராக கரும்பு பயிரிடப்படுகிறது. இது நீண்ட இழைத் தண்டுகளாகவும், தண்டுகளின் கரணைகளில் இருந்து இலைகள் மேலெழுந்து சோலையாக வளரும் இயல்புடையது. கரும்பு 6 அடி முதல் 19 அடி உயரம் வரை வளரக் கூடியது. கரும்பில் பல கலப்பினங்களை உருவாக்கியுள்ளனர. க்யூபா அதிக அளவில் கரும்பு பயிரிடுவதால், "உலகின் சர்க்கரை கிண்ணம்" என்று அழைக்கப்படுகிறது.

**கரும்பின் மருத்துவக்குணங்கள்**

ஏராளமான தாது சத்துகளை கரும்பு கொண்டுள்ளதால் இதன் சாற்றை பருக உடல் புத்து

ணர்ச்சியும்,உற்சாகமும் பெறுகிறது.கரும்புச் சாற்றை தொடர்ந்து பருகினால் உடல் மற்றும் மனம் மிகுந்த சுறுசுறுப்பு அடையும்.

வயிற்றில் பிரச்சனை இருப்பதால் வாய் துர்நாற்றம் ஏற்படும்.இதனை போக்க தினமும் கரும்புச் சாற்றை பருக வேண்டும்

கரும்பிலுள்ள கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் போன்ற கனிமங்கள் பற்களின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன.

கரும்பில் உள்ள பொட்டாசியம் வயிற்றின் அமில சுரப்புகளை சமன் செய்து உணவு செரிமானத்துக்கு உதவுகிறது. அத்துடன் மலக்சிக்கலினையும் போக்கவல்லது.

உடலில் அந்தரங்க உறுப்புகளின் தூய்மையை சரிவர பேணாதவவர்களுக்கு சிறுநீரக தொற்று வியாதிகள் சுலபமாக ஏற்படுகின்றன. இந்த பாதிப்பு நீங்க ஒரு நாளைக்கு இரு முறை எலுமிச்சை மற்றும் தேங்காய்த் இளநீர் கலந்த கரும்புச் சாறைப் பருகி வருவதால் சிறுநீரக தொற்று கிருமிகள் அழிந்து, சிறுநீரங்களின் நலம் காக்கப்படும்.

நீண்ட நேரம் கத்தி பேசுவதாலும், தொற்றுக்களினாலும் ஏற்படும் தொண்டை புண்களைப் போக்க ஒரு குவளை கரும்பு சாற்றில் சிறிதளவு சுண்ணாம்பு மற்றும் உப்பு சேர்த்து குடிக்க வேண்டும். இதனால் தொண்டையில் இருக்கும் கிருமிகள் அழிந்து தொண்டை புண் குணமாகிறது. நாம் சாப்பிடும் உணவில் உள்ள தேவையற்ற கொழுப்புகளே உடல் எடை அதிகரிக்க காரணமாகிறது தினமும் காலையில் கரும்புச் சாறு அருந்துவதால் இக் கொழுப்புக்கள் கரைந்து உடல் எடையை குறைய செய் கிறது.

இதயம் உடலின் அனைத்து பாகங்களுக்கும் ரத்த்தை செலுத்தும் அரும்பணியை செய்கிறது. கரும்புச் சாறு அருந்துபவர்களுக்கு இதயம் நலம் மேம்படுகிறது. அவ்வப்போது கரும்புச் சாறு பருகிவர இதய நோய்கள் குணமாகிறது. கரும்புச் சாறுடன் தயிர் சேர்த்து சாப்பிடுவதன் மூலம் உடல் உஷ்ணம் நீங்கி உடல் எரிச்சல் குறையும்.

கரும்புச் சாற்றை சாப்பிட்டு வர மூளை சுறு சுறுப்படைந்து அதன் செயற்பாடு அதிகரிக்கும். சிறார்களுக்கு ஏற்படும் புண்களைப் போக்க கரும்பை நன்கு நெரித்து புண் இருக்கும் இடங்களில் கட்டி வைப்பதால் அப்புண்கள் விரைவில் குணமாகும்.

மஞ்சள் காமாலை நோய் குணமாவதற்கு, இரண்டு டம்ளர் கரும்புச் சாற்றுடன் எலுமிச்சை மற்றும் உப்பு சேர்த்து குடிக்க வேண்டும்.

கரும்பு இனிப்பாக இருப்பதால், நீரிழிவு நோயாளிகள் சாப்பிட பயப்படுவார்கள். ஆனால் உண்மையில் இதில் இருக்கும் இனிப்பானது இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை சீராக வைக்கும். எனவே உடல் எடையை குறைக்க விரும்புவோர் அல்லது சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இதனை எந்த ஒரு அச்சமுமின்றி சாப்பிடலாம்.

கரும்பில் வைட்டமின் மற்றும் கனிமச்சத்துக்கள் அதிகம் உள்ளது. அதாவது பொஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம், கல்சியம் மற்றும் மக்னீசியம் போன் றவை அதிக அளவில் இருக்கின்றது எனவே இது உடலை எந்த ஒரு ஊட்டச்சத்து குறைபாடுமின்றி ஆரோக் கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது.

கரும்பில் இயற்கையாக உள்ள அல்கலைன் என்னும் பொருள், புற்றுநோயை குணப்படுத்தும் தன்மையுடையது. குறிப்பாக பெருங்குடல், நுரையீரல் அல்லது மார்பக புற்றுநோய் போன்றவற்றிற்கு சிறந்தது.

## 06.நெல்சன் மண்டேலா



கறுப்பின மக்களின் சூரிய னாய் அவர்களின் வாழ்வில் ஒளி காட்டியவர் தான் நெல்சன் மண்டேலா. இவர் ஜூலை 18-1918 இல் தென்னாப்பிரிக்கா வில் உள்ள குலு கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை சோசா பழங்குடி இன மக்கள் தலைவர். இவரின் தந்தைக்கு நான்கு மனைவிகள். இவர்க ளுக்கு 4 ஆண்களும் 9 பெண் களுமாக 13 பிள்ளைகள். இதில் மூன்றாவது மனைவியாகிய "நெல் சன்ரோபிசலாவிற்கு மகனாகப் பிறந்தவரதான் மண்டேலா. இவரை நெல்சன் மண் டேலா என்றே பொதுவாக அழைப்பார்கள். இவர் சிறுவயதில் குத்துச் சண்டை வீரராகவே அறியப்பட்டார்.

கிராம சூழலில் வாழ்ந்த இவரது குடும்பத்தில் நெல்சனே பள்ளிக் கல்வியைப் பயின்றார். சிறுவயதில் பாடசாலை விட்டு வந்து ஆடு, மாடு மேய்ப்பார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். கல்வியறிவைப் பெறுவதில் பெரிதும் நாட்டம் கொண்ட மண்டேலா, பின்னாளில் லண்டன் மற்றும் தென்னாபிரிக்கா பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1941-ஆம் ஆண்டு ஜோகானஸ்பேர்கில் பகுதி நேர சட்டக்கல்வியைப் படித்தார். மேலும் இவர் ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், தோட்ட முகவராகவும் பணியாற்றி வந்தார்.

அப்போது "நோமதாம் சங்கர்" என்ற செவிலியரைத் திருமணம் செய்து கொண்டார். மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு இருந்ததால் மனைவிக்கும் அவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பின்னர் தென்னாப்பிரிக்க அரசு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைத் தடை செய்தது. மண்டேலா மீது வழக்கு தொடரப்பட்டது. ஐந்தாண்டுகளாக அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டு இருந்தபோது 1958-ம் ஆண்டு "வின்னி மடிகி லேனா" என்பவரை மணந்தார். வின்னி தனது கணவரின் கொள்கைகளுக்காகப் போராடி வந்தார். மண்டேலாவுக்கு முதல் மனைவி மூலம் 3 குழந்தைகளும் 2 வது மனைவி மூலம் 2 குழந்தைகளும் உள்ளனர்.

கறுப்பின மக்களின் விடுதலைக்காக அறவழியில் போராட்டத்தைத் தொடங்கிய இவர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கொரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலா 1962-ல் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். 1990 இல் தென்னாப்பிரிக்கா அரசுத் தலைவரான பிரெட்ரிக் வில்லியம் டெக்ளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடையை அந்நாட்டில் நீக்கி, மண்டேலா 11.2.1990 அன்று விடுதலை செய்யப்படுவார் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அன்று மாலை விடுதலை

செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது 71 மண்டேலாவுடன் அவர் மனைவி வின்னி கை கோர்த்தபடி சிறையில் இருந்து வெளியே வந்தார். சிறைச்சாலையின் வாசலில் ஆபிரிக்கா நாட்டுத் தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் அவரை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

பின்னர் மண்டேலாவை காவலர் பாதுகாப்புடன் கேப்டவுன் நகருக்கு அழைத்துச் சென்றனர். மண்டேலா விடுதலை செய்யப்பட்டதை உலக தலைவர்கள் பலர் வர வேற்றார்கள். கேப்டவுன் நகருக்கு திரும்பிய மண்டேலா அங்கு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பேசினார். அவர் கூறியதாவது:-

"இனவெறி ஆட்சியை தனிமைப்படுத்த சர்வதேச சமுதாயம் தொடர்ந்து பிரசாரம் செய்ய வேண்டும். என்னுடைய விடுதலை மட்டும் பேச்சுவார்த்தைக்குத் தேவையான அடித்தளம் ஆகாது. நிற வேறுபாடு இல்லாமல் ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புதான் நம் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தின் மீது வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காண வேண்டும். கறுப்பர்களுக்குச் சம உரிமை கிடைக்க வேண்டும். அதுவரை போராடுவோம்."



1994 மே 10-ந்தேதி அவர் தென்னாப்பிரிக்காவின் அதிபர் ஆனார். அதிபர் ஆனபின், 1998-ம் ஆண்டு முதல் தென்னாப்பிரிக்கப் பள்ளிகளில் தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத்தி, உருது ஆகிய மொழிகளை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார். நோபல் பரிசுபெற்ற நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்ததன்பின் 1999-ல் பதவியை விட்டு விலகினார். இவர் 2-வது முறை அதிபர் பதவிக்கு போட்டியிட மறுத்துவிட்டார்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 2013 ஜூன் மாதம் 8-ம் தேதி மண்டேலா பிரிட்டோரியாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நலம் கவலைக்கிடமாக உள்ளது என தென்னாப்பிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமாவின் அலுவலகம் 2013 ஜூன் 23-ம் தேதி அறிவித்தது.

நெல்சன் மண்டேலாவின் நெருங்கிய உறவினர்கள் அனைவரும் பூர்வீக வீட்டிற்கு அவசரமாக வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மண்டேலா நலமடைந்து வீடு திரும்ப பிரார்த்தனை நடத்தி வந்தனர்.

5 டிசம்பர் 2013 அன்று தனது 95-வது வயதில் சிகிச்சை பலனின்றி நெல்சன் மண்டேலா காலமானார்.

## 07.சூரிய மண்டலத்துக்கு வெளியே 4000 கோள்கள்

சூரிய மண்டலத்துக்கு வெளியே இதுவரை 4,000 கோள்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூமியில் மட்டுமல்லாது விண்ணிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ள தொலைநோக்கிகள் மூலம் இந்த கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன. கடந்த 1992ஆம் ஆண்டு அலெக்ஸ்சாண்டர் வோல்ஸ்சான் மற்றும் டேல் ஃபிரெய்ல் ஆகியோர் ஒரு நியூட்ரன் நட்சத்திரத்தை சுற்றிவரும் கோள்களைக் கண்டனர், இதுவே சூரிய மண்டலத்துக்கு வெளியே கோள்கள் கண்டறியப்பட்ட முதல் சந்தர்ப்பமாகும். இதுவரை 4000இற்கும் மேலான கோள்கள், சூரிய மண்டலத்துக்கு வெளியே இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை பற்றிய ஆராச்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் உயிரினங்கள் வாழக்கூடிய சூழலுள்ள கோள்கள் சில இருப்பதாகவும் தெரிவித்துள்ளனார்.

## 08.இலங்கை



இலங்கையில் 1978 ஆம் ஆண்டு முதல் இரண்டாவது குடியரசு யாப்பு நடைமுறையிலுள்ளது. இவ்யாப்பில் அவ்வப்போது பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. 2015. மே 15 ஆந் தேதி வரை செய்யப்பட்ட திருத்தங்களுக்கு அமைய இலங்கை ஜனாதிபதி தொடர்பான விடயங்களை இங்கு தருகின்றோம்.

இவ்விடயங்கள் இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் சட்டமூல அலுவலகத்தினால் பதிக்கப் பெற்று இணையத்தில் வெளி வந்தது.

**குடியரசின் சனாதிபதி**

30. (1) இலங்கைக் குடியரசிற்குச் சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும் ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவராகவும் ஆயுதம் தாங்கிய படைகளின் படைத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) குடியரசின் சனாதிபதி மக்களினால் தேர்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் ஐந்தாண்டுகள் கொண்டவொரு தவணைக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

**சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தலும் அவரது பதவிக்காலமும்**

31. (1) சனாதிபதி பதவிக்கெனத் தேர்ந்தெடுக்கக்கூடிய தகைமை கொண்ட எந்தப் பிரசையும்-

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியினால், அல்லது

(ஆ) அவர், சட்டமன்றத்தின் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பவராயின் அல்லது இருந்தவராயின், வேறேதேனும் அரசியல் கட்சியினால் அல்லது ஏதேனும் தேர்தல் இடாப்பில் தமது பெயரைப் பதிந்துள்ளவரான ஒரு தேருநரால்,

அத்தகைய பதவிக்கான வேட்பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படலாம்.

(2) சனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும், அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராகார்.

(3) சனாதிபதியை தேர்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு, பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையமாலும் இரண்டு மாதங்க ளுக்கு மேற்படாமலும் நடைபெறுதல் வேண்டும்.

(3அ) (ஆ) (i) இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக உள்ள எது எவ் வாறிருப்பினும், சனாதிபதியானவர் அவரது (முதலாவது பதவிக்காலம் தொடங்கிய திலிருந்து) நான்காண்டுகள் மேலுமொரு தவணைக்குப் பதவி வகிப்பதற்காக தேர்தல் மூலம் ஆணையொன்றுக்கென மக்களை வேண்டி நிற்பதற்கான தமது முன்னத்தைப் பிரகடனம் மூலம் வெளிப்படுத்தலாம்.

(ii) ஓராம் உட்பந்தியின் கீழ் பிரகடனமொன்று செய்யப்படுவதன்மீது சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனத் தேதிக்குப் பின்னரும், அத்தகைய பிரகடனத்தைப் பின்பற்றி நடாத்தப்படும் தேர்தலிலான வாக்கெடுப்பு முடிவடைவதன் முன்னரும் ஆன எந்நேரத்திலும், பதவியிலிருக்கும் சனாதிபதி இறப்பின், அத்தகைய பிரகடனமானது, அத்தகைய இறப்பு நிகழ்ந்த தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட தாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரகடனத்தைப் பின்பற்றி நடத்தப்படவுள்ள தேர்தலானது இல்லாததாக்கப்பட்டதெனக் கருதப்படுதலும் வேண் டும். அத்தகைய இறப்பினால் ஏற்பட்ட சனாதிபதிப் பதவியிலான வெற்றிடம் 40 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

(இ) (i) இப்பந்தியின் கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றிலான வாக்கொடுப்பு முடி வடைவதற்கும் அத்தகைய தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படுவதற்கும் இடை யிலான எந்நேரத்திலும் அத்தகைய தேர்தலிலான வேட்பாளரொருவர் இறப்பின், தேர்தல்கள் ஆணையாளரானவர் அத்தகைய வேட்பாளரின் இறப்பைப் பொருட்படுத் தாது வாக்கெண்ணுதலைத் தொடர்ந்து நடாத்தி அத்தகைய தேர்தலின் முடிவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ii) அத்தகைய தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படும் நேரத்தில் சனாதிபதியாகத் தேர்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட உரித்துடையவரான ஆள் இறந்திருப்பின் தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய தேர்தலின் முடிவினை வெளிப்படுத்துதலாகாது. ஆனால், சனாதிபதியைத் தேர்தெடுப்பதற்கான புதிய வாக்கெடுப்பொன்றை நடாத்துதல் வேண்டும்.

(iii) உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இறப்பின் காரணத்தினால் சனாதிபதிப் பதவியில் வெற்றிடமொன்றிருக்குமெனில்,முதமைச்சரானவர்,அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்திக்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்திற்க்கும் இடையிலான காலப்பகுதியின் போது சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டு மென்பதுடன், அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுள் ஒருவரை, முதலமைச்சர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கென நியமித்தலும் வேண்டும். ஆயின்,அந்தநேரத்தில் முதலமைச்சர் பதவியானது வறிதாயிருக்குமெனின்,

அல்லது முதலமைச்சர் பதிற் கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பாரெனின், சனாதிபதிப் பதவியில் சபாநாயகர் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(ஈ) இப்பந்தியின் கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் சனாதிபதியாகத் தேர்தெடுக் கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளானவர்-

(1) அத்தகைய ஆள் பதவியிலிருக்கும் சனாதிபதியாவாரெனின் அவரது முதலாவது பதவிக்காலம் தொடங்கிய தேதிக்கு நேரொத்ததான, அந்தத் தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டின் (அத்தகைய தேர்தலுக்குப் பின்னரான தேதியொன்றாக இருப்பதான) அல்லது அடுத்துவரும் ஆண்டின் அத்தகைய தேதிக்குள் எத்தேதி முந்தியதோ அத்தேதியிலிருந்து தொடங்குவதாக (ஐந்தாண்டுகள் கொண்ட தவணை யொன்றுக்குப்) பதவி வகித்தல் வேண்டும் அல்லது

(2) அத்தகைய ஆள் பதவியிலிருக்கும் சனாதிபதியல்லரெனின், அத்தகைய தேர்த லின் முடிவு வெளிப்படுத்தப்படும் தேதியன்று தொடங்குவதாக (ஐந்தாண்டுகள் கொண்ட தவணையொன்றுக்குப்) பதவி வகித்தல் வேண்டும்.

(உ) நாற்பதாம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதிப் பதவியில் அடுத்து றுபவரான ஆளொருவர், இப்பந்தியின்(அ) என்னும் உட்பந்தியினால் சனாதிபதி ஒருவ ருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையைப் பிரயோகிப்பதற்கு உரித்துடைய வராதலா காது.

(ஊ) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, 160 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்படும் முதலாவது சனாதிபதியின் முதலாவது பதவிக்காலமானது, 1978, பெப்ரவரி 04ஆம் தேதியன்று தொடங்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி ஒருவரைத் தேர்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுகின்ற விடத்து, அத்தகைய தேர்தலில் சனாதிபதியாகத் தேர்தெடுக்கப்படுகின்ற ஆளின் பதவிக்காலமானது, பதவியிலிருக்கும் சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதன் மீது தொடங்குதல் வேண்டும்.

ஆயின், 40ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்வாறிருப்பினும்-

(அ) சனாதிபதியொருவரைத் தேர்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட எவரேனும், சனாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாரென வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரும் அவரது இறப்பு நிகழாதிருந்திருப்பின் அவரது பதவிக்காலம் எத்தேதியன்று தொடங்கியிருந்திருக் குமோ அத்தேதிக்கு முன்னரும் ஆன எந்நேரத்திலேனும் இறப்பின், தேர்தல்கள் ஆணையாளர், சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென புதிய வாக்கெடுப் பொன்றை நடாத்துதல் வேண்டும். அத்தகைய புதிய வாக்கெடுப்புக்கென நிர்ணயிக்கப் பட்ட தேதி, முதலாவதாகக் குறிப்பிடப் பெற்ற அத்தகைய தேதிக்குப் பிந்திய தேதியொன் றாக இருப்பின், இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளின் பத விக்காலமானது முதலாவதாகக் குறிப்பிடப்பெற்ற அத்தகைய தேதியன்று தொடங்கி யிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். 38(1) (ஈ)

என்னும் உறுப்புரையின் நோக்கங்க ளுக்காக மாத்திரம், புதிய சனாதிபதியினது பதவிக்காலம் தொடங்கும் தேதியானது, அவர் தேர்ந்தேடுக்கப்பட்ட தேதியாதல் வேண்டும்.

(ஆ) பதவியிலிருக்கும் சனாதிபதியானவர் சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கொடுப்பொன்றில் வேட்பாளரொருவராக இல்லாதவிடத்து, அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படாதுள்ளவிடத்து, அவரது பதவிக்காலமானது அத்தகைய தேர்தல் முடிவு வெளிப்படுத்தப்படும் தேதியன்று முடிவடைந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்தலில் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆள் உடனடியாக ஆனால் அத்தகைய தேதியில் இருந்து இரு கிழமைக்குப் பிந்தாது பதவியேற்றல் வேண்டும்.

ஆயின், பதவியிலிருக்கும் சனாதிபதி, 30ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரென வெளிப்படுத்தப்பட்ட ஆள் பதவி ஏற்கும் வரை, தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும். சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆள் பதவி யேற்கத் தவறியமை காரணமாக சனாதிபதி பதவி வறிதாகவருமெனில், பதவியிலிருக்கும் சனாதிபதியானவர், முதமைச்சர், அல்லது முதமைச்சர் பதவி அந்த நேரத்தில் வறிதாக இருந்தால் அல்லது பதிற்கடமையாற்ற இயலாதவராக முதமைச்சர் இருந்தால், சபாநாயகர், 40ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கிணங்க சனாதிபதிப் பதவியில் பதிற் கடமையாற்றத் தொடங்கும் வரை, சனாதிபதி பதவியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(இ) உட்பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இறப்பின் காரணத்தால் சனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஒன்று இருக்கும் எனின், முதமைச்சரானவர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்திற்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்திற்க்கு இடையிலான காலப்பகுதியின் போது சனாதிபதி பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டும் என்பதுடன், அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுள் ஒருவரை முதலமைச்சராக பதிற்கடமையாற்றுவதற்கென நியமித்தலும் வேண்டும்.

ஆயின் அந்நேரத்தில் முதலமைச்சர் பதவியானது வறிதாயிருக்குமெனில், அல்லது முதலமைச்சர் பதில்கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பர் எனில், சனாதிபதிப் பதவியில் சபாநாயகர் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(5) சனாதிபதியின் தேர்தல், தேர்தல்கள் ஆணையாளரினால் நடத்தப்படுதல் வேண்டும். அவர் அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்கள பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய தேதியையும் வாக்கெடுக்கப்பட வேண்டிய தேதியையும்நிர்ணயித்தல் வேண்டும்.

(6) பாராளுமன்றம், சட்டத்தின்மூலம், பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:

(அ) சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமித்தலும்,

(ஆ) சனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்பட வேண்டிய தேருநர் இடாப்பும், அத்தேர்தலுக் கான நடவடிக்கை முறையும்.

(இ) அத்தகைய தேர்தல் தொடர்பான தவறுகள் யாவையென எடுத்தியம்பலும் அத்தவறுகளுக்கான தண்டனைகளும்.

(ஈ) அத்தகைய தேர்தலை வெற்றும் வறிதுமானதென வெளிப்படுத்தற்கும் ஆட்சேபிக் கப்பட்ட தேர்தல் எதனையும் பற்றிக் தீர்மானிப்பதற்குமான ஏதுக்களும் முறை யும்,அத்துடன்


(உ)அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறு எல்லாக் கருமங்களும்.

தொடரும்....

---

## 09.சர்வதேச ஆண்கள் கிரிக்கெட்டில் பெண் நடுவர்





ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 31 வயதாகும் கிளாரி போலோசாக் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் பெண்கள் கிரிக்கெட்டில் களநடுவராகப் பணியாற்றி வருகிறார். 2018-ல் நடந்த பெண்கள் உலகக்கோப்பை ரி-20 அரையிறுதிப் போட்டியிலும் இவர் நடுவராக செயல்பட்டார். இதுவரை 15 ஒரு நாள் போட்டியில் நடுவராகச் செயல்பட்டுள்ள இவர் 27.4.2019 இல் நடைபெற்ற சர்வதேசக் கிரிக்கெட் போட்டி யொன்றில் புதிய வரலாற்றுச் சாதனையைப் படைத் துள்ளார்.

2019 ஏப்ரல் மாதம் நடைபெற்ற உலகக் கிரிக் கெட் லீக் டிவிஸன்- 2 தொடரில் இறுதிப்போட்டி ஏப்ரல் 27 இல் இடம் பெற்றது. இதில் நமீபியா மற்றும் ஓமன் அணிகள் மோதின. இதில் களநடுவராக கிளாரி பணியாற்றியுள்ளார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க தருணம் குறித்து பேசியுள்ள கிளாரி "ஆண்கள் கிரிக்கெட்டில் நடுவராக பணியாற்றுவது மிகவும் பெருமை யாக இருக்கிறது. பெண்களுக்கு எதிராக இருக்கும் பல்வேறு தடைகளை உடைப்பதாக இந்நிகழ்வு இருக்கும். இதனால் பெண்கள் அதிகளவில் இந்த துறை நோக்கி வர விழிப் புணர்வை ஏற்படுத்தும்" எனத் தெரிவித் துள்ளார்.

## 10.உலகின் மிக உயரமான கட்டடம் டுபாயின் புர்ஜ் கலிஃபா

உலகின் மிகவும் உயரமான கட்டிடம் டுபாயில் அமைந்துள்ள புர்ஜ் கலிஃபா ஆகும். இக்கட்டிடத்தின் உயரம் 828 மீட்டர் ஆகும். இது 163 மாடிகளைக் கொண்டது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் (டுபாய்) அமைந்துள்ள வானளாவிய கட்டிடமான புர்ஜ் கலிஃபா கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் 2004ம் ஆண்டு செப்ரெம்பர் 21இல் ஆரம்பிக்கப்பட்டன. இதன் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் தேதி மன்னர் ஷேக் முகமது திறந்து வைத்தார்.

புர்ஜ் கலிஃபாவில் தளங்கள் அதிகமாக இருப்பதோடு, இங்குள்ள எஸ்கலேட்டர் படிகள் ஒரு நொடிக்கு 10 மீட்டர் வேகத்தில் செல்லும் வகையில் மிகவும் நீளமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிடம் திறக்கப்படுவதற்கு கடைசி நிமிடம் வரை புர்ஜ் துபாய் என்ற அழைக்கப்பட்டது.

ஆனால் துபாயின் கடன்சுமையை அபுதாபி கலிஃபா 10 பில்லியன் அளவில் சரிசெய்ததன் நன்றிக்கடனாக "புர்ஜ் கலிஃபா" என்று பெயர் சூட்டப்பெற்றதாக பரவலாக பேசப்பட்டது.

இந்த புர்ஜ் கலிஃபாவின் கட்டிடச் செலவுகளுக்காக 1. 5 பில்லியன் டொலர்கள் வரை பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதுவரை உலகில் உயரமான கட்டிடமாக 101 மாடிகளைக் கொண்ட 1671 அடி உயரமான தாய்வானில் உள்ளதைப்பே நகரின் பொருளாதார மையக் கழகத்திற்கு சொந்தமான "தைப்பே 101" இருந்தது. இதை விட ஆயிரம் அடியாவது அதிகமாக உருவாக்க வேண்டும் என்ற திட்டத்துடன் 2,700 அடி உயரமான 163 மாடிகளைக் கொண்ட "புர்ஜ் கலிஃபா" அமைக்கப் பட்டது.

உலகின் உயரமான கட்டிடம் என்பது மட்டுமன்றி இந்த பூமியில் மனிதர்களால் உருவாக்கப்பட்டதும் வடிவமைப்புகளில் உச்சத்தில் இருப்பதும் "புர்ஜ்கலிஃபா" தான்.இதன் 76வது மாடியில் உலகிலேயே உயரமான நீச்சல் குளம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

158வது மாடியில் ஒரு மிக உயர்ந்த மசூதி உள்ளது. மேலும் இங்கு 900 ஸ்டுடியோக்கள், மற்றும் இத்தாலிய முறையில் வடிவமைக்கப்பட்ட ஹோட்டல்கள் என்பனவும் உள்ளன. ஒருநாளைக்கு இந்த கட்டிடத்திற்கு தேவைப்படும் "ஏசி" வசதி, 12 ஆயிரத்து 500 டன் ஐஸ் கட்டியை உருக்குவதற்கு சமம் எனக் கூறப்படுகிறது.



அமைந்துள்ளது. 43 மீட்டர் நீளமான 192 கொன்கிரீட் தூண்கள் மேல் தான் இந்த கட்டிடம் நிற்கிறது. இதன் அடித்தரை கட்டிட தளத்தளம் 12500 கனமீட்டர் ஆகும். இது 3 மீட்டர் தடிப்புடன் உள்ளது. கடலுக்கு அருகில் இருப்பதால் கொன்கிரீட் இரும்புகள் துருப்பிடிக்காத வகையில் பிரத்தியேமாக அமைக்கப்பட்டுள்ளன.

புர்ஜ் கலிஃபா காற்று அழுத்தம், ஈர்ப்பு விசை மற்றும் பூமி அதிர்வு இவைகளை தாங்கக் கூடிய சக்தி கொண்ட தாக உலகின் ஆற்றல் மிக்க கட்டிட நிபுணர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிடத்தில் மொத்தம் 57 லிஃப்ட்களும், 8 எஸ்கலேட்டர் படிகளும் உள்ளன. இதில் இரண்டு லிஃப்ட் கள் இரண்டடுக்கு கொண்டவை. இவையிரண்டும் தரை தளத்திலிருந்து 124வது மாடி வரை மட்டுமே செல்லும். வண்ண விளக்குகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ள லிஃப்ட்கள் 1 வினாடிக்கு 10 மீட்டர் உயரத்தை கடக்கும் ஆற்றல் கொண்டவை.

இக்கட்டடமானது மேலே செல்லச் செல்ல தளங்க ளின் நீளம் குறைவடைந்து கொண்டு செல்லுகிறது.

**பார்வையாளர் மாடம்:**

கட்டிடத்தின் 124வது தளத்தில் பார்வையாளர்களுக் கான பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து பார்த்தால் பாலைவனம், அங்குள்ள கட்டிடங்கள், சுற்றிலும் உரு வாக்கப்பட்டுள்ள சோலைகள், கடல் என்பனவற்றைப் பார்க்கலாம்.

இந்த கட்டிடத்தினால் டுபாய் பொருளாதாரம் வளரும் என நம்பப்படுகிறது. இக்கட்டடம் கின்னஸ் சாதனை புத்தகத்தில் பாதிவாகியுள்ளது. இதை விட பெரிய உயரமான கட்டிடம் பூமியில் உரு வாக்கவேண்டு மானால் குறைந்தது இன்னும் 10 ஆண்டுகள் ஆகும் என கூறப்படுகிறது.

கடந்த 2019 ஏப்ரல் 21ந் திகதி அதாவது உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம் பெற்ற அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு புர்ஜ் கலிஃபாவிலும் அஞ்சலி செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.




2003ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரவு விருந்தொன்றின் போது தலைவர் முஹம்மது அல் அப்பரிடம் கனடா நாட்டை சேர்ந்த குழுவினர் ஒரு திட்டம் குறித்த கோரிக் கையை முன்வைத்தனர். இதை மன்னர் ஷேக் முஹம் மதுவிடம் அல் அப்பர் சொன் னதும் உடனடியாக அனுமதி கிடைத்தது. இதைத்தொடர்ந்து சுமார் 200 ஹெக்டேர் பாலை வன நிலப்பரப்பில், வணிகக் கடல் மாநகர் உருவாக்கப்பட் டது. இந்த வணிகக்கடல் மாநக ரின் நடுவில் புர்ஜ் கலிஃபா





# வலுவிடம் கேளுங்கள்



**வலுவிழந்தவர்கள் அதிகமாக பிறரில் தங்கி வாழும் மனப்பாங்கில் அதிகமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். அது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

**சுபா கிளிநொச்சி.**


கீழைத்தேச சமூகங்களின் இயங்கு தளத்தில் தங்கி வாழ்தலுக்கான ஏதுக்கள் தாராளமாகவே உட்புகுத்தப்பட்டுள்ளன. காலனித்துவக் காலத்திலிருந்து இற்றை வரை தங்கி வாழ்தலை ஊக்கப்படுத்தும் வகையிலான பொறிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

இந்த வலைப்பின்னலுக்குள் மாற்றுத்திறனாளிகளும் சிக்குவதும் தவிர்க்க முடியாததே. இருப்பினும் சமூக மயப்பட்ட வலுவிழந்தவர்கள் எவரும் தங்கி வாழ்தல் நடத்தையை விரும்புவது கிடையாது.

பிறரையும் தாங்கி வாழ்தலையே தமது தலையாய இலக்காகக் கொண்டு வாழ்கின்றனர். இதைத் தாங்களும் சமூக மாந்தர்கள் மத்தியில் நிதர்சனமாக கண்டிருப்பார்கள் என

## அன்பான வாசகர்களே!

மாற்றுத்திறனாளிகள் தொடர்பானதும் மற்றும்
தன்னம்பிக்கை தரக்கூடியதுமான கவிதைகள் சிறுகதைகள்
என்பவற்றை வலுவிற்கு எழுதி அனுப்பி வையுங்கள்.
தரமான ஆக்கங்கள் வலுவில் பிரசுரமாகும்.



## அன்பான வாசகர்களே!

**வலு இதழினை சந்தாமுறையில் பெற்றுக்கொள்ள விரும்பின் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். நாம் உங்களுக்கு சந்தா விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்போம். அதனைப் பூர்த்திசெய்து அனுப்புவதனூடாக வலு இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.**



முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

# தேடல் என்ற ஒன்றை வைத்திருந்தால் வெற்றி நிச்சயம்

## மாரிமுத்து நாகராசா

யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் ஒரு கையினை இழந்தவர் ஒருவர் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் அணுகி "ஏன் பிச்சை எடுத்துச் சீவிக்கிறாய்? உன்னால் முடிந்தவாறு ஏதாவது தொழில் செய்து கௌரவமாகப் பிழைக்கலாமே!" என்று கேட்டேன். என்னை மேலும் கீழும் ஒரு முறை பார்த்துவிட்டு மெல்ல நகர்ந்துவிட்டார் அவர். அவரிடத்தில் சாராய வாசனை வேறு வீசியது.

அப்போதுதான் கருவி நிறுவனத்தில் தினமும் நான் சந்திக்கும் மாற்றுத் திறனாளிகள் பலர் என் நினைவுக்கு வந்தனர். கால்கள் இரண்டும் இயங்கா நிலையில் கருவியின் தயாரிப்பான திரவ சலவைச் சவர்க்காரத்தை விற்று ஒரு அரச ஊழியருக்குச் சமமான ஊதியத்தைப் பெறுபவரும், கண்களற்றவர்கள் கதிரைகள் பின்னி, மற்றும் கருவி திரவ சலவைச் சவர்க்காரம் என்பனவற்றை விற்று மகிழ்ச்சியோடு வாழ்கின்றவர்களும் எனப் பலர் கருவி நிறுவனத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுள் கல்வி கற்று, தொழில் பயின்று மிகவும் சுய கௌரவத்தோடு வாழ்கின்றவர்களோடு பஸ் நிலையத்தில் பிச்சை எடுப்பவரையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

வலிமை, ஒரு மனிதனின் உடலில் அல்ல, மனதிலேயே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். பாரத்தைப் பாரம் என்று எண்ணிவிட்டால் அது கனக்கும். இது என்ன பாரம்? என்று எண்ணினாலோ பஞ்சு மூட்டையை ஒத்ததாக அது லேசாகிவிடும். எனவே மனசே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது.

இது போன்ற மன வலிமையோடு தனது கருமங்களை ஆற்றுகின்ற மாற்றுத் திறனாளியான மாரிமுத்து நாகராசாவைப் பற்றிக் கேள்விப்பட்டோம். எமது இதழான வலுவுக்காக அவரை நேர்முகம் காண வேண்டுமென மனம் விரும்பியது. அவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தோம். அந்த வாய்ப்பை யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள்துறை மாணவியான செல்வி கம்சனா இரத்தினேஸ்வரன் எமக்கு ஏற்படுத்தித் தந்துதவினார்.

மாரிமுத்து நாகராசாவின் பிறந்த இடம் வட்டக்கச்சி. 1966 இல் மாரிமுத்து வள்ளியம்மை தம்பதியினருக்கு பிறந்த ஒன்பது பிள்ளைகளில் தலைமகனாகப் பிறந்தவர் தான் மாரிமுத்து நாகராசா. குடும்பத்தில் நிலவிய ஏழ்மை காரணமாகச் சிறு வயதிலேயே குடும்பப் பாரத்தைச் சுமக்கத் தொடங்கியவர். அதற்காக தந்தைக்கு உதவியாக





குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டித் தனது ஒன்பது வயதிலேயே வேலைக்குச் செல்லத் தொடங்கினார். கடை ஒன்றில் சிப்பந்தியாக வேலை செய்ததாகவும், அந்த வேலை கடினமானதாக இருந்தது. எனினும் தனக்கிருந்த பணத் தேவையினால் அது அவ்வளவு கஷ்டமானதாகத் தெரியவில்லை என்றும் சொன்னார் மாரிமுத்து நாகராசா. தொடர்ந்து வேலை செய்து தந்தைக்குப் பக்க பலமாக இருந்தவர் இருபத்தொரு வயதினை எட்டியபோது அவருக்குத் திருமணம் செய்யப் பெற்றோர்கள் விரும்பினர். திருமணத்திற்குப் பின்னர் அவர் தனது தொழிலை மாற்றிக் கொண்டார். கட்டடப் பணிகளிலே மேசனாகப் பணியாற்றத் தொடங்கினார். அவருக்கு நான்கு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும்போதுதான் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. தேடல் என்ற ஒன்றை வைத்திருந்தால் வெற்றி நிச்சயம்-என்று சொல்லும் மாரிமுத்து நாகராசா தன்னைப் பற்றிப் பின்வருமாறு சொல்லக் கேட்டோம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்று சில காலம் முகாம் வாழ்க்கைக்குப் பின்பு மீண்டும் ஊருக்கு வந்தோம். முகாம் வாழ்க்கையில் எங்களில் மூவருக்குக் காயப்பட்டதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. வரும்போது மிகவும் துயரத் தோடுதான் வீடு திரும்ப முடிந்தது. நான் மனைவி மக்கள் என எட்டுப் பேர்களையுடைய குடும்பத்தில் மொத்தம் மூன்றுபேர் அங்கவீனர்களாகக் காணப்பட்டோம். எனக்கும் எனது மூத்த மகனுக்கும், இரண்டாவது மகனுக்கும் குண்டடி பட்டதில் காயம் ஏற்பட்டிருந்து. எனக்குக் கை பாதிக்கப்பட்டுத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

முகாமிலிருந்து வீடு திரும்பியவுடன் எமக்கு வாழ்வாதாரம் கிடைத்தது. அதில் யாழ்ப்பாணம் சென்று ஆடுகள் வாங்கினேன். அவைகளை வளர்த்துக் கொண்டிருக்கும்போது SADAP + திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டம் செய்வதற்கான உதவியாக விதைகளைத் தந்தனர். அப்போது நான் உடல் பாதிக்கப்பட்டிருந்ததால் கிளச் உபயோகித்துத்தான் நடப்பது வழக்கம். ஆரம்பத்தில் SADP இரண்டு மூன்று பைக்கற் விதைகளைத்தான் தந்தனர். அவற்றை பத்து கிலோ அரிசிப் பையிலேயே பயிரிட்டேன். பின்பு அவர்கள் எனக்குக் கறுத்த பொலித்தீன் பைகளைத் தந்துதவினர். பின்பு எனது ஆர்வத்தைப் பார்த்து அதிக விதைகளையும் பைகளையும் தந்துதவினர்.

பிறர் கத்தரி, மிளகாய், வெண்டி, போன்ற பயிர்களை நடும்போது நான் சற்று வித்தியாசமாக கறுவா, கோப்பி, றக்கன் புரூட் போன்றவற்றை வாங்கி நட்டேன். அவர்கள் எனது முயற்சியில் பூரணதிருப்தியடைந்தவர்களாகப் பல உதவிகளைச் செய்தனர். 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வரட்சியினால் எனது வீட்டுத் தோட்டம் வலுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. வட்டக்கச்சிப் பகுதியிலே வழங்கப்பட்ட 120 பேருக்கான SADP + வீட்டுத் தோட்டத் திட்டத்திலே நான் ஒருவனே வெற்றிகரமாகச் செய்து முதலாம் இடத்தைப் பிடித்துக் கொண்டேன்.

2013 ஆம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தினால் தேனீ வளர்ப்புத் திட்டம் ஊக்குவிக்கப்பட்டது. அதில் எனக்கு தேனீப் பெட்டியோன்று தந்தனர். எனக்கு உரிய அரை ஏக்கர் காணிக்குள்ளேயே தான் எனது அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றேன்.அதில் வீட்டுத்தோட்டம் உண்டு. கோழி, ஆடு, மாடு மற்றும் காளான் என்பனவற்றையும் வளர்க்கிறேன்.இவை அனைத்துக்கும் நடுவேதான் எனக்கு ஒரு நிரந்தர வீடும் தற்காலிக கொட்டைகைகளும் உண்டு. அதில் ஒரு பகுதியில் தான் மில் ஒன்றை கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். அதற்குப் பிள்ளையார் அரைக்கும் ஆலை என்று பெயரிட்டிருக்கிறேன்.அதில் மூன்று ( ஏறத்தாழ 70 ஆயிரம் பெறுமதியுடையவை) இயந்திரங்களைப் பொருத்தித்தான் அரைக்கும் வேலைகளைச் செய்கிறேன். எனது மில் உள்ள 2கிலோ மீற்றர் சுற்றாடலில் 7மில்லுகள் உண்டு. அதிலும் எனது மில் உள்ள இடம் அதிகளவு சனப் புழக்கம் இல்லாதது. இருந்தும் எனது தொழில் தர்மத்தினால் பலர் என்னைத் தேடிவருகின்றனர். அரிசிமா, குரக்கன்மா, மஞ்சள்மா, குறுஞ்சாப் பவுடர், இரசப் பவுடர் போன்ற பல பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்கிறேன். உள்ளூர் மக்கள் மட்டுமல்ல புலம்பெயர்ந்தவர்களும் அவரவர் நாட்டுக்குத் திரும்பும்போது எமது தயாரிப்புகளை வாங்கிக் கொண்டு போகின்றனர்.



2012 ஆம் ஆண்டு வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டேன். 2013 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர் விருது முதலாம் இடம், 2014 (RDB BANK) சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர் முதலாம் இடம், 2016 ஜனாதிபதி விருது வடமாகாணத்தில் இரண்டாம் இடம், 2016 ஆம் ஆண்டு சிறந்த காளான் செய்கையாளர் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் இடமும் கிடைத்தது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன தேசிய சேவையில் இடம்பெறும் வீட்டுத்தோட்டம் நிகழ்ச்சியிலும் பங்குபற்றியிருக்கிறேன். எனது குடும்பத் தினரின் அனுசரணை தான் என்னுடைய விருதுகளுக்கான முக்கிய காரணம். தேடல் இருந்தது. தேடினேன் பலன் கிடைத்தது. யாரும் தேடல் என்ற ஒன்றை வைத்தி ருந்தால் கட்டாயம் முன்னேறலாம் - என்று சொல்லுகிறார் மாரிமுத்து நாகராசா.

நாட்டிலே பாதிக்கப்பட்டவர்கள் என்று பலர் சொல்லிக் கொண்டு என்னவெல்லாமோ உதவிகளைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு யாரும் உதவி செய்வதில்லை. எங்களிடம் முயற்சி இருக்கிறது. ஆனால் எனது முயற்சிக்கு இன்னும் சரியான உதவி கிடைக்கவில்லை. என்னிடத்தில் இன்னும் பைக்கற்றுகளை ஒட்டப் பயன்படும் சீலர் இல்லை. சீசன் நேரங்களில் நெல்லை வாங்கி வைத்தால் சிறுது லாபம் சம்பாதிக்கலாம். அதற்கும் என்னிடம் பெரிய முதல் இல்லை.அரைத்துக் கொடுக்கக் கூடிய ஓடர்கள் நிறைய உண்டு. அதற்குச் சரக்குச் சாமான் களை வாங்கவும் முதல் தேவை. எனக்கு யாராவது உதவி செய்தால் நான் இன்னும் முன்னேறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு- என்று சொல்லும் மாரிமுத்து நாகாராசாவுக்கு உதவி செய்ய வேண்டும் என்று யாராவது விரும்பினால் அவர்கள் கருவி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம். கருவி உதவுவதற்குக் காத்திருக்கிறது.

## சிறுகதை



# கண் கெட்டதுக்கு அப்புறம் சூரிய நமஸ்காரம்

**சந்திரசேகரன் சிவாந்தினி**
மமா/ஹவ/நோர்வூட்
தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.

"ம்மா பால்...." என்றவாறு பால்காரன் மாடசாமியின் ஓலம் ஒலித்து கொண்டிருந்தது. டிசெம்பர் மாதம். குளிரால் கங்காதெரு நிரம்பி இருந்தது. காமினி தலைக்கு பொருந்தக் கூடிய வாறு குல்லா ஒன்றையும், காலுக்கு பொருத்தமில்லாத பாதணி ஒன்றையும் அணிந்து கொண்டவாறு உள்ளிருந்து வந்தாள். "அம்மா இந்த மாத பாக்கி?" என்றான் மாடசாமி. "ஆ.அதுவா" தாரேம்பா. 10 ஆந் தேதிக்கு இன்னும் நாளிருக்குதானே?" என்றாள் அவள். "அதில்லமா போன மாத பாக்கி தரலியே என்றாள்" சரி...சரி... "10ஆந் தேதிக்காக எல்லாம் சேர்த்து மொத்தமா தாரேன்? ஒண்ணும் யோசிக்காத." என்றாள் காலை 5.30 மணி என்பதால் ஆதவன் இன்னும் எழும்பவில்லை. இவள் தனது வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டு மெதுவாக சமையலறைக்குச் சென்று தன் சமையல் வேலைகளை ஆரம்பித்தாள். சூடான காபி ஒன்று தன் தந்தைக்கு. ஒரு பிளேன்டி தன் தாய்க்காக என ஒவ்வொருவரின் சுவைக்கேற்ப ஒவ்வொன்று. தாய் எழும்பி புராணம் பாட ஆரம்பித்தாள். "ஏன்டி... எல்லா வேலையையும் செஞ்சிகிட்டு இவ்ளோ கஷ்டபடுற நா செஞ்சிக்குவேன். நீ போய் கொஞ்சம் ஓய்வெடுத்துக்க."

"அம்மா 26 வருஷமா என்ன எவ்வளவோ கஷ்ப்பட்டு வளத்தீங்க. இனியும் தோளுக்கு மேல வளந்த புள்ளைகள வைச்சிட்டு கஷ்டப்படுறீங்க. இந்த காலத்துல பெத்தவங்க எத்தனையோ பேர் ஊனமுற்ற பிள்ளைகள வளக்க கஷ்டப்பட்டுகிட்டு சிறுவர் இல்லம், ஊனமுற்ற இல்லம்னு சேத்திறாங்க. ஆனா நா பிறப்பிலிருந்து கிடைச்ச சந்தோஷத்தை கெடுத்துட்டு உங்கள இவ்ளோ தூரம் சிரமப்பட வைச்சிட்டேன். எல்லாம் என்னாலதான்." "சாரிம்மா...." என கண்கள் கலங்கினாள். "இதுக்கே வருத்தப்பட்டா எப்பிடி? பிள்ளை தப்பு பண்ணா அத திருத்த வேண்டியது என் பொறுப்பு தான். ஆனா நா அத விட்டுட்டு உம் பக்கத்துல இல்லாம போனது என் பிழைதான். ஆனா ஒண்ணு. உனக்கு இருக்கிற திறமை வேற யாருக்கு இருக்கு? உன் மாதிரி கம்பியூட்டர்ல யாரால வேகமா வேர்க் பண்ண முடியும்? உன் கிட்டையும் திறமையிருக்கு. சரி ரொம்ப டிலே பண்ணாம வேலைக்கு போக இண்டர்விவ்யூக்கு ரெடியாகு. "ம்" சீக்கரம் என்றாள் தாய்.

நேரம் மு.ப 10.00 மணி "மாம்பழ விக்கிற கண்ணம்மா...." என்று முபீன் நானாவின் வூப்பர் செட்டு அலறியது. அதற்கு முன்னால் நிலை கொண்டிருந்ததே இந்த தாஜ் ஹோட்டல். இலங்கையின் தலை சிறந்த ஏ அண்ட் கே கம்பனியின் இண்டர்வியூ இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அது அந்தக் கம்பனியின் அஸிஸ்டென்ட் மெனேஜர் போஸ்ட்டுக்காகவே அந்த போட்டி சுமார் 250 பேர் குழுமி இருந்த அவ்விடத்தில் 251 வது ஆளாக காமினி நின்று கொண்டு இருந்தாள். அங்கிருந்து ப்யூன் ஒருவன் வந்து காமினியிடம் "என்ன மேடம்? நீங்க போய் இண்டர்விவ்யூக்கு?" என்று நகைப்பு சிரிப்பு சிரித்தான். "ம்ம்.... பூனைக்கு கண்ண மூடிக்கிட்டா அந்த உலகம் இருண்டுடிச் சுன்னு நினைக்குமாம். அதே மாதிரி நாமும் இருந்தா எந்த பயனும் இல்ல. நீங்க எதும் ட்ரபிள் பண்ணிக்க வேணாம்." என்றவாறு இருக்கையை ஒருத்தி அடையாளங்காட்ட அதில் அமர்ந்து கொண்டாள்.

தன் பழைய நினைவுகள் அலை பாய ஆரம்பித்தன. 26 வயது நிரம்பிய தங்கப் பதுமை. கன் னங்கள் சிவந்த நிறம். ரோஜாப்பூ இதழ்கள். கத்தி போன்ற மானேங்கு விழிகள். என்ன பயன்? விழிகளில் இறைவன் அம்பெறிந்தான்.

எழில் கொஞ்சும் இடமாம் கொத்மலையில் தான் வளர்ந் தாள். அந்நகரிலுள்ள நாவலப் பிட்டி கதிரேசன் கல்லூரியில் தான் ஆரம்பக்கல்வி கற்றாள். தாய், தந்தை இருவருமே தோட் ட தொழிலாளிகள் தான். தம்பி, தங்கை என இளமையின் சந்தோக்ஷத்திற்கு அளவே யில்லை. சாதாரண தரத்தில் சித்தியெய்த வேண்டிய நிர்ப் பந்தம் இருந்தது. காரணம் அவ ளுக்குப் பின்னால் தான் இரத்த உறவுகள். அப்போது தான் கல்வியில் ஈடுபாடு வரும். தன் விளையாட்டு நேரத்தைக் குறைத்து படிப்பில் ஈடுபாடு காட்டி னாள். ஆசிரியர்களின் ஆதரவு பெருகவே சித்திகள் நல்ல நிலையில் பெறப்பட்டன. உயர்தரம் பெரிய பாடசாலையில் கணித பிரிவில் கற்பதே விருப் பம். தங்குமிடம், உணவு, படிப்பு என வசதிகள் பெருகிக் கொண்டு சென்றன. தாயின் நகைகள் பஜர்லால் சேட்டின் கடையில் விற்பனைக்குச் சென்றன. காமி னியின் கக்ஷ்டம் தீர்வு கண்டது. அனிதா ஆன்டியின் வீட்டிற்கு போர்டிங் பார்த்துக் கொண்டு நடையைக் கட்டினாள். குடும் பத்தின் பிரிவுத்துயர் கவலையில் ஆழ்த்தினாலும் மனதை இறுக்கிக் கொண்டாள். கூடவே கையில் ஸ்மாட் தொலைபேசி ஒன்றும். அடிக்கடி நடப்பவற்றை பரிமாறிக் கொள்ள உயர் தரம் தொடங்கிற்று. முதல் நாள் நண்பர் அறிமுகம் அதில் அறிமுகமான ஒருத்தி தான் சீலா. சீலாவின் பால்ய சிநேகிதன் நவனீதன். நல்ல சிவந்த நிறம். சீப்பிற்கு கட்டுப்படாத 4 மயிர்கள். நடிகனை ஒத்த உடற்கட்டு என அம்சமாக இருந்தான். மூவரும் ஒன்றாகவே கதை பேசினார்கள், விளையாடினார்கள், உண்டார்கள் இவ்வாறு மூன்று திங்கள் முடிந்தது. நாட்கள் நகர நகர காமினியிடம் தன் காதல் புறாவை தூது விடுக்க ஆரம்பித்தான். நவனீதன் அடிக்கடி பார்த்து சிரிப்பான். மெசேஜ் பரிமாறுவான். பரிசுப்பொருளால் மகிழ்ச்சிப்படுத்துவான். ஏதாவது ஒன்றை செய்து அவளை கவர முயற்சி செய்து கொண்டிருந்த போது எதிர்பாராத நாளொன்றில் காமினியிடம் தன் காதல் விருப்பத்தைக் கூறவே, அவளும் ஒரு புன்னகையால் தன் விருப்பத்தை கொடுத்தாள். நாட்கள் இனிக்க தொடங்கின. இரு நெஞ்சங்களும் ஒரு நாள் பொழுது காணாவிடினும் துடிப்புகள் அதிகமாயின. அவன் அவளோடு செலவு செய்த நாட்களே அதிகம்.

இப்படியே செல்ல.. செல்ல சீலா தனிமையை உணரத் தொடங்கினாள். "இந்த காமினியும், நவீனும் ஒன்னா இருந்துகிட்டு என்ன மட்டும் தனியே விட்டுறாங்க. இந்த நவீனோட இருந்தப்ப ஏதாவது கிப்ட் கொடுக்க, லெட்டர் கொடுக்க மட்டும் நான். இப்ப அவளா? இது என்ன நியா யம்?" என மற்ற நண்பர் குழாத்திடம் அளக்க ஆரம்பித் தாள். இது ஒரு புறமிருக்க சீலா இந்த வெறுப்பை காமினியும் நவனீதனும் பிரிய வேண்டுமென வேறொரு திட்டத்தை தீட்டினாள். தன் கூட படிக்கும் மாதவனை புது நண்பன் என அவனுடன் சேர்ந்து பழக ஆரம்பித்தாள். இருப்பினும் நவனீதனுக்கு சிறு வயதிலிருந்தே மாதவனைத் தெரியும். அவனுடைய குணநலன், பழக்க வழக்கங்கள் பற்றி அறிந்தவன். அன்றொரு சனிக்கிழமை மாதவன் பக்கத்து வீட்டு இளம்பெண் குளித்துக் கொண்டு இருக்கையில் அதை தன் மொபைலில் வீடியோ எடுக்க முயன்றான். அதைக் கண்ட அவள் அலறனாள்.

இதனால் மாதவனை பெற்றவர்கள் அவமானத்தால் நின்று கொண்டிருந்ததை பார்த்தவர்களில் நவனீதனும் ஒருவன். என்ன செய்வது எல்லாம் ஆண்டவன் வகுத்தது. ஆகவே சீலாவுக்கு ஆபத்து நிகழ வாய்ப்புள்ளதால் பயந்து அவளுக்கு உதவ முயன்றான். இது தொடர்பில் காமினிக்கும் நவனீத னிற்கும் வாக்குவாதம் நீண்டது. உயர்தரம் முடிவுறும் தருணம். பிரியாவிடை நிகழ்வு முடிய இரவு 9.30 மணியானது. அன்று காமினியை வழியனுப்ப கூடவே வந்த நவனீதன் திடீரென்று தன் மொபைலில் வந்த மெசேஜை கண்டு "நீ போயிட்டே இரு சீலாவுக்கு ஒரு பிரச்சினை. போயாக ணும். நான் சீக்கிரம் வந்துருவேன்". என்றவாறு தன் ஹீரே ஹொண்டாவில் பறந்தான். வழியில் கடும்மழை பொழிய ஆரம்பித்தது. ஏதோ ஒரு குடிகாரன் தன் காரை ஓட்ட தெரியாமல் ஓட்டி காமினியின் மீது பாய்ந்ததில் கண்ணாடி சில்லுகள் அவள் கண்ணை பதம்பார்த்தது.

மறுநாள் விடிந்ததும் காமினி கண்களைத் திறக்க முடியாது அவதிப்பட்டாள். ஆம் இரு கண்க ளும் ஒளி இழந்தன. அவள் உல கம் இருண்டது. பரீட்சை தோற்ற முடியவில்லை. நண்பிகள் என எல்லாரும் வந்த போதும் அவளின் ஜோடிப்புறா மட்டும் வர வில்லை. கடைசியில் சீலாவை பார்க்க சென்றவன் அவளுடன் சென்றுவிட்டதாகவே இறுதி பதில் வந்தது.

தன் இறுதி காலத்தையாவது தாய், தந்தையிடம் கழிக்க விரும்பினாள். 10 வருடங்கள் ஆகியும் வேலை தர ஒரு நிறுவனம் கூட முன்வரவில்லை. இந்த 10 வருட காலத்திலேயே கணணி பயிற்சி எல்லாம். இன்றும் ஒரு இண்டர்விவ்யூவில்.... என நினைவிலிருந்து அவளை பியூன் அடுத்த ஆள் என்றவுடன் இறுதிக்கு 8 பேர் முன்னிலையில் செல்ல ஆரம்பித்தாள். உள்ளே சென்றவுடன் அதிகாரி அந்த பக்கம் திரும்பி இருந்தார். காமினி மெல்லிய குரலில் "மே ஐ கம் இன்?" என்றாள். "யெஸ் ப்ளீஸ் கம்" என்றவாறு திரும்பினார் அவர். எங்கேயோ பழகிய குரல் அது. அதை உணர அவளுக்கு வெகு நேரமில்லை. "பை த பை ஆர் யூ காமினி. ஐ மை ரைட்" என்றார் எம்.டி. "யெஸ் சார்" எனப் பதிலளிக்க. எம்.டி யும் "உங்க பைல்ஸ் எல்லாம் செக் பண்ணிட்டேன். நீங்க இந்த வாரம் ஜயிண்ட் பண்ணிடலாம். உங்க குறையா நிறைவா நெனைங்க. "ஆல் த பெஸ்ட். யூ கேன் கோ..." என்று உரைத்தார்.

காமினி வெளியே வந்த பின்னும் அவள் மனதில் ஒரு கவலை. வேலையை செய்வதா? என யோசித்தாள். ஆம். கம்பனியின் எம்.டி அதே நவனீதன். இங்கு நடப்பது நிஜமா? ஏன்று கூட தோன்றிற்று. குடும்ப கஷ்டம். எனவே வேலையை தொடரலாம் என நினைத்தாள். முதல் நாள் காலை மாணிக்கத்தின் ஆட்டோ வில் கண்டி மாநகரிலுள்ள கம்பனியை வந்தடைந்தாள். வேலையைத் தொடங்கினாள். மாதம் மூன்றானது கம்பனி யில் பணிபுரிவோர் காமினியின் திறமையை கண்டு வியந் தனர். திறமைக்கேற்ப ஊதியம். எனவே மகிழ்ச்சி. மீண்டும் விளைந்தது. அது மீண்டும் சதியானது. கம்பனியில் அன்று வேலைப்பளு அதிகம் என்பதால் மேலதிக நேரம். நிற்க வேண்டிய நிர்ப்பந்தம். நேரம் ஏழானது... எட்டானது... செக்யூரிட்டி வந்து அம்மா "வேலை முடிஞ்சுதா?" என்றான். "இன்னுமில்லண்ணே. இன்னும் கொஞ்ச நேரம்." சிறிது நேரத்தில் ஒரு டீயுடன் வந்தான். செக்யூரிட்டி. "அம்மா இந்தாங்க டீ. டிசம்பர் மாச குளிர் உடம்பு தாங்காது. இப்படி வைக்கிறேன்" என்று சென்றான்.

அதைக் குடித்த பின்பு காலை 7 மணி. வண்டி நகர வைத்தியசாலையில். அருகில் அவள் கைகளை பற்றியவாறு நவனீதன். அவள் எழுந்த பின் அவனும் இரத்த சிவப்பு கண்களுடன் சற்று முன் தூங்கியிருப்பதை காட்டியது. "ஓ எழுந்திட்டியா? இப்ப எப்படியிருக்கு?" என்றான். எனக்கு என்னாச்சு. நீங்க இங்க வர வேண்டிய காரணம்?.... என் றாள் வியப்புடன். "ம்ம்... உனக்கு முன்னமிருந்தே சொல்லி இருக்கேன் தெரியாதவன் எதை கொடுத்தாலும் வாங்கா தன்னு. அந்த செக்யூரிட்டி கொடுத்த டீயில தூக்க மாத்திரை கலந்திருக்கு. அவனும் பக்கத்து கடையிலுள்ள முனியனும் சேர்ந்து உன்னச் சிதைக்கப் பாத்தானுங்க. நல்ல நேரம் நீ போக மட்டும் நான் காத்துகிட்டிருந்தேன். உண்மைய சொல்லப் போனா. பிரியாவிடை அப்பையும் எனக்கு வந்த மெசேஜ் சந்துருகிட்டயிருந்து தான். சீலாவுக்கு நடந்த கதியும் இது தான். ஆனா நா அன்னைக்கு உன்ன விட்டுட்டு போனதால தானே என் கண்ணுக்கு இப்படியொரு நிலமை. இதில் மறைக்கப்பட்ட உண்மை என்னன்னா, நம்ம சீலாவுக்கு வலது கால் ஊனம். செயற்கைக்கால் பொருத்தப்பட்டிருக்கு. இந்த விஷயம் உனக்குக் கூட தெரியாது. ஆனா எனக்கு தெரியும். அவளோட நிலமைதான் உன் நிலமையும். இதற்கு பிராயசித்தமா உன்னோட கண்களை ஆப்ரேக்ஷன் பண்ண என் பிரண்டுகிட்ட பேசியிருக்கேன். எல்லாம் நல்லபடியா நடக்கும். "என்ன மன்னிச்சிருங்க எல்லாரும் சொன்னத கேட்டு உங்கள தப்பா புரிஞ்சிகிட்டேன். "என்று கதறியழுது கட்டி அணைத்தாள். நவனீதனை காமினி தொடர்ந்தாள். "ஆமா சீலா இப்ப எங்க? எப்படியிருக்கா?" என்றவுடன் "சீலா இப்ப பத்திரமா இருக்கா. நா அன்னைக்கு சரியான நேரத்துக்கு போகாட்டி அவள உயிரோடயே பாத்திருக்கவே முடியாது. இப்ப என் பிரன்ஸ் ஒபிஸ்ல வேலை செய்றா. ஓன்னோட கண் ஆப்பரேக்ஷன் முடிய அவகிட்ட உன்ன அழைச்சிட்டு போறேன். இப்ப நீ கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க." என்று கூறியவாறே தலையை வருடி விட்டான் நவனீதன்.



# வலு தரும் ஜோதிடம்

யோதிடர் வீ.ஏ.சிவராசா

## வீடு கட்டுதல்/ குடிபுகுதல்

### தமிழ் மாதங்கள்

| மாதங்கள் | வீட்டு வாயில் |
|---|---|
| சித்திரை, ஐப்பசி, கார்த்திகை | வடக்கு, தெற்கு |
| வைகாசி | கிழக்கு, தெற்கு |
| தை, மாசி, பங்குனி, ஆடி, ஆவணி | கிழக்கு, மேற்கு |

### வீடு கட்டும் மாதங்கள்
### தமிழ் மாதங்கள்

| மாதங்கள் | வீடு கட்டுதல் |
|---|---|
| தை | மேற்கு |
| மாசி, ஆவணி, | மேற்கு, கிழக்கு |
| பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி | கட்டலாகாது |
| சித்திரை | வடக்கு |
| வைகாசி, கார்த்திகை | வடக்கு, தெற்கு |
| ஆடி | கிழக்கு |
| ஐப்பசி | தெற்கு |

### கிணறு இருக்கும் திசைகள்

| | |
|---|---|
| கிழக்கு | - செல்வம் |
| தென்கிழக்கு | - புத்திரநாசம் |
| தெற்கு | - மரணம் |
| தென்மேற்கு | - களத்திரநாசம் |
| மேற்கு | - சம்பத் |
| வடமேற்கு | - சத்துருநாசம் |
| வடக்கு | - ஆரோக்கியம் |
| வடகிழக்கு | - சந்தோஷம் |
| நடுவில் | - பொருளழிவு |

**அன்னப்பிரசனம் (சோறு தீத்துதல்)**

ஆண் மகவிற்கு 06,08,10,12 ம் மாதத்தில்

பெண் குழந்தைக்கு 5,9,11 ம் மாதத்தில்

**காது குத்துதல் (கர்ணவேதனம்)**

பிறந்த 12,16 நாளிலும் 6,7,8,10 ம் மாதங்களிலும்

**இருபாலருக்கும் விவாகம்**

ஆண்களுக்கு 21, 23, 25 ஆகிய ஒன்றித்த வயதுகளில்

பெண்களுக்கு 18, 20 ,22 ஆகிய இரட்டித்த வயதிலும்

செய்யலாம்.

# வலு இதழ்- 19 பற்றிய நயவுரை

கே.எஸ். சிவஞானராஜா

"வலு" என்ற பெயரோடு மாற்றுத்திறனாளிகளின் தகவல்களைத் தாங்கி வரும் காலாண்டுச் சஞ்சிகையே வாசகர்களை ஒரு குடும்பம் ஆக்கின்றது.

இச்சஞ்சிகை யாவருக்கும் சென்று சேரும் வண்ணம் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பா ளிகளாக வேண்டும். காரணம் இறைவன் எமக்களித்த பேறுகளுடன் நாம் பூரணமாகப் பெற்றிருக்கின்ற வரங்களை நாம் அனுகூலமாக்குவதே நம் பொறுப்பாக இருப்பதற்கு இது வேண்டப்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் நாம் மாற்றுத்திறனாளிகளை வரமாக்க வேண்டும்.

வலு என்ற பதம் ஆன்மாவின் உச்சமான பலத்தை உடலிலும் படைப்பிலும் கொண்டு வருவ தாகும். மாற்றுத்திறனாளிகளுக்கு இந்தப் பலம் சாதாரண ஒரு மனிதனை விட இரட்டிப்பானதாகும். அதன் உபகாரமே "வலு" என்ற சஞ்சிகையாகும்.

அழகான முகப்பு! அச்சொட்டான பெயரின் வடிவமைப்பு! அர்த்தமுள்ள முத்திரைச் சின்னம்! அதனுள் மாற்றுத்திறனாளிகளின் அடையாளங்கள்! நீல, ஊதா, மண்ணிற வர்ணங்களின் வாயிலாக வெளிப்பட்டு நிற்கும் கருவூலங்கள்! யாவும் தரம் கூட்டி நிற்கின்றன. மனிதா மனிதா மனதினை மாற்று, நாளைய விடியலின் வழியாவோம் ஆகிய இரண்டு கவிதைகளும் தோரணங்களாக அமைய, பிரதம ஆசிரியர் க.தர்மசேகரம் அவர்களது கைவிளக்கு எம்மை உள்ளே அழைத்துச் செல்கிறது.

உலக விருட்சங்களில் றிச்சட்பேர்ணஸ்டைனின் வாழ்க்கைக் குறிப்பு ஒவ்வொரு மனிதனையும் தட்டி எழுப்புகிறது. ஞானேந்திரனுக்கு ஒரு பதக்கம் சூட்டலாம். பாலபாரதியின் ஒட்டிசம் (Autism) கட்டுரையும், செய்திச் சாளரமும் மிகவும் வலுக் கொண்டவை. திருநங்கைகளின் உரிமையோடு கருணாநிதி உயிர் பெறுகிறார். கால்களும், கைகளும் இல்லாத அச்மத் ஜீல்கர் தனது படைப்பின் மூலம் ஒரு பரம்மா ஆகின்றார். சிகரம் தொட்ட சிகை அலங்காரத் தொழிலாளியின் கரங்களில் கடவுளைக் காண்கின்றோம். நாம் மனிதனாக மாறுவதற்கு இவற்றை ஒரு முறையல்ல பல முறை படிக்க வேண்டும்.

மேலும் தசரசம் இனிக்கிறது "பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க" என்ற பாடலும், பொன்னின் ஒளி பூவின் வெறி சாந்து பொதி சீதம் என்ற சீதையின் நடையும் சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப என்ற சுரமஞ்சரியின் காட்சியும் அற்புதம். நா.கீதாகிஸ்ணனின் தொகுப்பும் பலே. இலக்கியம் எம்மைப் பரவசப்படுத்துகிறது.

அவசிய தொலைபேசி இலக்கங்களை அவசரமாய் ஒட்டி வைக்க வேண்டும். காடுகளுக்குள் ளும் பயமின்றி எம்மை அழைத்துச் செல்கின்றார்கள் மாற்றுத்திறனாளிகள்.

செவ்வாயிலும் புயலா? நம்பவே முடியவில்லை. வினோதினியின் வரலாறு எழுதப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் விழிப்புணர்விக்கு வினோதினியின் பயணம் ஒரு பாடமாக அமையட்டும். எமது முற்றத்து மல்லிகை மணம் வீசாமலா இருக்கும்? அவர்காலில் செய்யப்பட்ட இருபத்தைந்து சத்திரசிகிச்சைகளும் கண்டிப்பாக இருபத்தைந்து சாதனை களை இங்கு சாதித்தே தீரும்.

இரண்டு கையிருந்தும் நாம் என்ன தான் சாதித்தோம் சுகில் அப்பாஸ் என்ற வீரன் தனது இடக்கை இல்லாத போதும் சர்வதேச தர வரிசையில் பதினாறாவது இடம் என்பது இலேசான காரியமா? நாம் எதைத் தான் ஒழுங்காகச் செய்திருக்கிறோம்? தோற்றே போய் விட்டோம். சிவராசாவின் சிறுகதை நாவற்குழியோடு முடியவில்லை. நாடு முழுவதற்குமான இந்த சிறுகதைக்கு நன்றி சொல்ல வைத்து விட்டது. நிகேதபவன் வடையோடு அண்ணா கோப்பியும் வலு சேர்த்தது. 100.00 அவர்களை வலுப்படுத்தும். மொத்தத்தில் மறுவற்ற வலு இது.

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

## செயற்பாட்டு அறிக்கை

**(1.1.2018-31.12.2018)**

**அறிமுகம்:**

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் வலுவிழப்புடன் கூடிய நபர்களின் ஓர் சமூகப் பணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் பார்வை, கேட்டல், பேச்சு போன்ற புலன்சார் குறைபாடுடையவர்களும் கை, கால் பாதிப்புற்ற உடலங்க குறைபாடுடையவர்களும் மனநலிவு, தற்சிந்தனை போன்ற உளசார் குறைபாடுடையோரும் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களின் கல்வி, கலை, கலாசார, வாழ்வாதார, தொழில் மேம்பாட்டிற்கான முன்னெடுப்புக்களையும் இவர்களின் குடும்ப நலன் தொடர்பான விடயங்களையும் முன்னிலைப்படுத்தியதாய் எமது பணிகள் அமைகின்றன.

2013ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனம் ஐந்து ஆண்டுகளைத் தாண்டிய பயணத்தில் வலுவிழப்புடன் கூடிய நபர்களின் பல்துறைசார் நலன்களை மேம்படுத்துவதில் அளப் பெரிய பணியாற்றி வருகின்றது. இந்த வகையில் 2018 ஆம் ஆண்டு (01.01.2018-31.12.2018) வரையான காலப் பகுதியில் எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரம் இங்கே தரப்படுகின்றது.

### வாழ்வாதார உதவிகள் வழங்கல்:


அங்கத்தவர்களின் வாழ்வாதாரத் தினை மேம்படுத்தும் பொருட்டு எமது நிறுவனம் பொருத் தமான சுயதொழில் உத விகளினை வழங்கி அவர்களின் வாழ் வாதாரத்தினை மேம்படுத்த உதவி புரிந்து வருகின்றது. இந்த வகையில் இவ் வாண்டு ஒரு பயனாளிக்கு பலசரக்குக்கடை நடாத்து வதற்குத் தேவையான பொருட்களும்,



மற்றுமொரு பயனாளிக்கு பொருட்கள் கொண்டு சென்று விற்பனை செய்வதற் கான பெட்டியும், மற்றொரு பயனாளிக்கு சமையல் பாத்தி ரங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் 7 பயனாளிகளுக்கு தையல் இயந் திரங்கள் மற்றும் துணிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வாண்டு 450000.00 பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

### கல்வி உதவிகள் வழங்கல்:

பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் என்பவற்றில் எமது அங்கத்தவர் கள் மற்றும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சியினை உயர்வடையச் செய் யும் பொருட்டு எமது நிறுவனம் மாண வர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளினை வழங்கி வருகின்றது. இந்த வகையில் இவ்வாண்டு 39 பிள்ளைகளுக்கு மாதாந் தம் கல்வி நிதி வழங்கல் திட்டத்தின் கீழ் 685500.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டு 60மாண வர்களுக்கு 30000.00 ரூபா பெறுமதி யான கற்றல்



உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன் பெறுமதி ரூபா 45000.00 ஆகும்.

**மாதம் ஒரு பொதி :**

எமது நிறுவனம் தொழில் புரிய முடியாத நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அங்கத்தவர்களுக்கு மாதம் ஒரு பொதி என்னும் செயற்றிட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது. இந்த வகையில் மாதாந்தம் நிரந்தரமாக வழங்கப்பட்ட 20 பயனாளிகளுக்கான பொதிகள் உட்பட ரூபா 1000000.00 பெறுமதியான 500 பொதிகள் இவ்வாண்டு இத்திட்டத்தினூடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



**விழாக்களும் நிகழ்வுகளும்:**


கருவி நிறுவனத்தின் ஆண்டு விழா நிகழ்வு யூன் 10இல் அச்சுவேலியில் அமைந்துள்ள ,ராஜமாணிக்கம் மண்டபத்திலும், மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு டிசெம்பர் 2இல் பருத்தித்துறை ஹாட்லிக்



கல்லூரி மண்டபத்திலும், திரு மு.பாலசுப்பிரமணியம் அவர்களின் சிறுவர் செந்தமிழ் பாடல்கள் எனும் நூல் வெளியீட்டு விழா ஏப்ரல் 7இல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் இடம்பெற்றது. மேலும் ஒக்டோபர் 14இல் வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வும், டிசெம்பர் 25,ல் ஒளி விழா நிகழ்வும் எமது நிறுவனத்தில் இடம் பெற்றன. இவ் விழாக்களில் கருவி அங்கத்தவர்கள்,ஆர்வலர்கள், நிர்வாகசபையினர், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**"வலு" சஞ்சிகை:**


மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் நோக்குடன் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விடயங்களினையும், அவர்களது ஆக்கங்களினையும், பொது விடயங்களினையும் தாங்கி வலு என்னும் காலாண்டுச் சஞ்சிகை எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது. 2014 ஆண்டு முதல் காலாண்டுக்கொரு முறை வெளிவரும் இச்சஞ்சிகையின் 17, 18, 19, 20 ஆகிய



இதழ்கள் வெளிவந்துள்ளன. பல்லாயிரக் கணக்கான வாசக வட்டத்தைக் கொண்ட இச்சஞ்சிகை தனது இலக்கை நோக்கிய பயணத்தில் வெற்றி கண்டுள்ளது. இதற்கு ஆதரவு வழங்கி வருகின்ற நல்லுள்ளங்க ளுக்கும் இச்சஞ்சிகையினை நெறிப்படுத் தும் நிர்வாக ஆசிரியர் திரு நா.கீதாகிருஸ் ணன் அவர்களுக்கு எமது நன்றியினை இத் தரு ணத்தில் தெரிவித்து கொள்கின்றோம்.

**கருவியின் ஆற்றுகைகள்:**

கருவி அங்கத்தவர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கு டன் எமது நிறுவனம் பட்டிமன்றக்குழு. இராகஸ்ருதி இசைக்குழு. நாடகக்குழு போன்ற குழுக்களை உருவாக்கி சமூகத் திற்கு ஆரோக்கியமான வகையில்



ஆற்றுகைகளினை நிகழ்த்தி வருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டு அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவத்தின் போது இராகஸ்ருதி இசைகுழு மற்றும் பட்டிமன்றக்குழு என்ப வற்றின் ஆற்றுகைகள் இடம் பெற்றன. மேலும் எமது ஆண்டு விழா நிகழ்வின் போதும் பட்டிமன்ற ஆற்றுகை இடம் பெற் றன. இவ்வாற்றுகைகளினை நெறிப்படுத் தும் பட்டிமன்றக்குழு இயக்குனர் திரு.து.யசிந்தன், இராகஸ்ருதி இசைக்குழு இயக்குனர் திரு.அ.சந்திரகுமார் ஆகி யோருக்கு இவ்விடத்தில் நன்றியினைக் கூறும் அதே வேளை, இந்நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கியவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

**உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு:**

எமது நிறுவனம் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகினூடாக கருவி Shine எனப்படும் திரவ சலவை சவர்க்காரம் ஒன் றினை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றது. இதனூடாக மாற்றுத் திறனாளி களுக்கு வேலை வாய்ப்புக்களினை வழங்கி வருகின்றோம்.



இவ்வாண்டு இவ்வலகினூடாக ரூபா 900000.00 இனை இலாபமாகப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. இவ்வல கினை நெறிப்படுத்தும் திரு.இ.கந்தராசா, திரு.க.சர்வானந்தா ஆகியோருக்கும் இவ்விடத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

**கண்காட்சி**

எமது நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற திரவ சலவை சவர்க்கரத் தினை கண்காட்சி நிகழ்வுகளில் காட்சிப் படுத்தி வருகின்றோம். இதனூடாக இதனை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி விற் பனை செய்து வருகின்றோம். அந்த வகை யில் இவ்வாண்டு நல்லூர் மகோற்சவ காலத் திலும், நல்லூர் சமூக செயற்பாட்டு மையம், யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானம், திருகோணமலை என்பவற்றில் இடம்



பெற்ற வர்த்தக கண்காட்சிகளின் போதும் கருவி Shine இனை காட்சிப்படுத்தி சந்தைப்படுத்தியிருந்தோம்.

### கொடித்திங்கள்:

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்தி அதனூடாக நிதியீட்டத்தினைப் பெற்று வலுவிழந்தவர்களின் வாழ்வை




வளமாக்கும் நோக்குடன் எமது நிறுவனம் ஆகஸ்ட் 16 தொடக்கம் ஒக்டேபர் 15 வரையான காலப் பகுதியினை கொடித்திங்களாக பிரகடனப்படுத்தி பல செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது. இச்செயற்றிட்டத்தினூடாக ரூபா 900000.00 இனை எம்மால் சேகரித்துக் கொள்ள முடிந்தது. இச்செயற்றிட்டத்திற்கு உதவி நல்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினர், பொது மக்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### கௌரவிப்பு:

எமது நிறுவனம் எமது சமூகப் பணிகளின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்பவர்களினையும் சமூக சேவையில் உயர் பணியாற்றியவர்களினையும் கௌரவப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் எமது ஆண்டு விழா நிகழ்வின் போது வலுச்சஞ்



சிகை விநியோகப் பிரிவில் பணியாற்றும் திரு.செ.சசிராஜ் அவர்களையும் கருவியின் பணியாளர் திரு மாதன் மகேந்திரன் அவர்களையும், மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின் போது கொடித்திங்கள் நிகழ்வின் வெற்றிக்கு பங்காற்றிய திரு.செ.சசிராஜ் திரு.த.குகதாசன், ஆகியோரையும் கருவிச் செயற்றிட்டங்களை குறும் காணொளியாக்கிய திரு.சி.கோபாலன் அவர்களினையும் கௌரவித்திருந்தது.

### பயிற்சி நெறிகளும் பயில் அமர்வுகளும்:

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடனும் மாற்றுத்திறனாளிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் பயிலமர்வுகள், நிகழ்வுகள் என்பனவற்றினை நாம் நடாத்தி வருகின்றோம். அத்துடன் இவர்களுக்குப் பொருத்தமான தொழிற் பயிற்சிகள், வழிகாட்டல்கள் என்பனவற்றினையும் வழங்கி வருகின்றோம். இந்த வகையில் பனம்பொருட்களினை பயன்படுத்தி கைப்பணி பொருட்களினை உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சி நெறிக்கு எமது அங்கத்தவர்கள் ஏழு



பேரினை பனை அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட பயிற்சிநெறியில் பங்கு பெறச் செய்தோம்.

எமது நிறுவனம் துணி, தோல், கடதாசி என்பனவற்றைப் பயன்படுத்தி பைகள் செய்வதற்கான பயிற்சி நெறியினையும் எமது அங்கத்தவர்களுக்கு வழங்கியிருந்தது. அத்துடன் நல்லூர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட பயில் அமர்வுகளிலும் நாம் பங்கு பற்றி பயன் பெற்றோம்.

**கருவியினை நிரந்தரமான இடத்தில் நிறுவுதல்:**

எமது நிறுவனம் அலுவலகப் பணிகளையும் மற்றும் இதர பணிகளையும் மேற் கொள்வதற்கு, வலுவிழந்தவர்கள் வசதியாக வந்து செல்லக் கூடிய இடம் ஒன்றை தெரிவு செய்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான காணிக் கொள்வனவுக்கென நிதி வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் இப்பணிக்கு நிதியினை வழங்கவுள்ளவர்களினையும் நாம் வரவேற்கின்றோம்.

**அன்பளிப்பு:**

இவ்வாண்டு எமது அலுவலக பாவனைக்கென வடமாகாணசபை உறுப்பினார் திரு.பா.கஜதீபன் அவர்களால் தளபாடத்தொகுதியும், கௌரமாகணசபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்களால் கணனித் தொகுதியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும் யாழ் தேசிய சேமிப்பு வங்கியினரால் ஒருதொகுதி பாவனையிலிருந்த தளபாடங்களும், யாழ் மாவட்ட பாரவூர்தி சங்கத்தினரால் அலுமாரிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றிகள்**

எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகளுக்கு அறிவு வளம், அனுபவ வளம் மற்றும் பொருள் வளம் ஆகியவற்றினூடாக பங்களிப்புக்களை வழங்கி வருகின்ற அன்பர்கள், சமூகசேவை ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு எமது சமூகப் பணிகளோடு இணைந்துள்ள ஆலயங்கள், சங்கங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கருவியின் சமூகப் பணிகளுக்கு இறை கருணையும் சமூகப் பணியாளர்களின் பங்களிப்பும் தொடர்ந்தும் கிட்டும் என நாம் நம்பு கின்றோம்.

-நன்றி -



# எழுதுங்கள் வெல்லுங்கள்

## போட்டி இல. 22 வினாக்கள்

1. மேல் மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் எவை?
2. அக்குபஞ்சர் என்பதன் பொருள் என்ன?
3. தசரத மன்னனின் குலகுரு யார்?
4. கங்காருவின் கர்ப்ப காலம் யாது?
5. இலங்கையின் செயற்கைக்கோளின் பெயர் என்ன?
6. சொப்பன சுந்தரி எனும் பாடலை பாடியவர் யார்?
7. ஹெலன் கெலரை உலகம் போற்றும் அளவிற்கு உயர்வடையச் செய்த அவரது ஆசிரியர் பெயர் என்ன?
8. உலக ஒட்டிச தினம் எப்போது கொண்டாடப்படுகிறது
9. கடந்த கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கால்களால் பரீட்சை எழுதி 8A, B பெற்றவர் யார்?
10. இலங்கையில் முதல் முதலாக விழிப்புலன் மற்றும் செவிப்புலன் அற்றவர்களுக்காக நிறுவப்பட்ட விடுதிப்பாடசாலை எது? எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதி 15.07.2019 ற்கு முன்னர் எமக்குக் கிடைக் கக் கூடியதாக அனுப்புங்கள்.**

**இப்படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படும்.சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு (1) 1000/=, (2) 500/=, (3) 250/=, பணப்பரிசில்கள் வழங்கப்படும்.**

## போட்டி இல.22 விடைகள்

01. ..............................
02. ..............................
03. ..............................
04. ..............................
05. ..............................
06. ..............................
07. ..............................
08. ..............................
09. ..............................
10. ..............................

1. முழுப் பெயர் : ..............................
2. தபால் முகவரி : ..............................
..............................
3. தொலைபேசி இல : ..............................
4. பிறந்த ஆண்டு மாதம் திகதி : ..............................

## போட்டி இல: 21இன் விடைகள்

1. 01.01.2007
2. 01.01.1999
3. "கிரெவ்வீஸ்"
4. பெப்ரவரி 13
5. இத்தாலியின் பைசா நகரம்
6. 5 வயது
7. யூன் 2018
8. வலுவிழப்புடன் கூடிய நபர்களை வலுவூட்டுதலும் அவர்களுக்கான சமூக உள்வாங்கல் மற்றும் சமத்துவம் என்பவற்றை உறுதிப்படுத்தலும்.
9. செப்ரெம்பர் மாத இறுதி ஞாயிறு
10. ஸ்டீபன் வில்றஸையர்

**அனுப்ப வேண்டிய முகவரி :**
எழுதுங்கள் வெல்லுங்கள்
**கருவி**
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல : 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

போட்டி இல:20 வெற்றியாளர்
**அரியரட்ணம் கனிஸ்ரோ**
151, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# கருவியின் வேண்டுகோள்

**அன்பு உறவுகளே**

- அவசியமானதும் அவசரமானதுமான பணிக்காக உங்கள் பெறுமதிவாய்ந்த கொடைக்கரங்களை எங்களுக்குத் தாருங்கள்.
- கருவி நிறுவனத்தை நிரந்தரமான ஓர் இடத்தில் நிறுவுவதற்காக நீர்வேலி பூதர்மடப் பகுதியில் 8 பரப்புக் காணி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- குறித்த காணி கொள்வனவுக்காக பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா பதினைந்து இலட்சம் (1500000.00) காணி தருணருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- மிகுதி ரூபா இருபத்தைந்து இலட்சம் (2500000.00) 3 மாத காலப்பகுதிக்குள் காணி தருணருக்கு நாம் வழங்க வேண்டியுள்ளது.
- எமது சமுகத்தின் மீதும் கருவி நிறுவனத்தின் மீதும் தாங்கள் கொண்டுள்ள அன்பினையும் அக்கறையினையும் நம்பி இந்த உடன்பாட்டிற்கு நாம் வந்துள்ளோம்.
- நீங்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நெருக்கடிகளைத் தாண்டி இந்த உயர்வான பணிக்கு பங்களிப்புச் செய்வீர்கள் என நாம் நம்புகின்றோம்.



- உங்கள் நன்கொடைகளை அலுவலத்தில் நேரடியாகவோ அல்லது HNB மெற்றோ கிளைக் கணக்கிலக்கமாகிய **(கணக்கிலக்கம்: 0160 20 64 1972)** ஊடாகவோ வழங்க முடியும்.
- மின்னஞ்சல் முலமாவோ அல்லது அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்தோ தாங்கள் தந்த கொடைக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமுக வள நிலையம்,
1166/15, அருளம்பலம் ஒழுங்கை, (கல்வியங்காடு சந்தி)
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
**தொலைபேசி.இல. 021 205 4224, 0773246876**
**Email :** Karuvi.org@gmail.com




# வலு தரும் வாய்ப்பு

**ரூபா 100/= இனைச் சேமியுங்கள்**

## வலுச் சஞ்சிகையினை உங்கள் வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

வலு சஞ்சிகையின் சந்தாதாரராக நீங்கள் இணைந்து கொள்வதன் மூலம் வலு உங்களைத் தேடி வரும். கீழ் காணும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

வலு காலாண்டுச் சஞ்சிகையின் வருடச் சந்தா விபரம் வருமாறு

- ❖ 4 புத்தகங்கள் 4 x 100 = ரூபா. 400/=
- ❖ தபால் கட்டணம்: 4 x 50 = ரூபா. 200/=
- ❖ மொத்தச் சந்தா ரூபா.600/=
- ❖ விசேட கழி ரூபா. 100/=

நீங்கள் செலுத்த வேண்டியது **ரூபா 500/= மட்டுமே**

**சந்தாவினை வங்கிக் கணக்கின் ஊடாகச் செலுத்துவதாயின் "கருவி மாற்றுத்திறனாளி களின் சமூகவள நிலையம்"** -என்ற பெயரிலுள்ள கொமர்ஷல் வங்கி சேமிப்புக் கணக்கு இலக்கம் : **8002193546** இல் வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினை கீழ் காணும் கருவியின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சந்தாவினை வங்கிக் காசோலை மற்றும் மணியோடர் மூலம் செலுத்துவதாயின் பெறுநர் என்ற இடத்தில் "கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் " என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம்.

நீங்கள் சந்தா செலுத்திய விபரம் கிடைக்கப் பெற்றவுடன் உங்கள் தபால் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ பற்றுச் சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு :**

**"வலு "**
**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,**
**இல.: 1166/15, அருளம்பலம் ஒழுங்கை**
**( கல்வியங்காட்டுச் சந்தி)**
**நல்லூர் வடக்கு , யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கங்கள் : 021 205 4224 அல்லது 076 638 5563**

---

### விண்ணப்ப படிவம்

01. பெயர்:....................................................................................

02. முகவரி:..................................................................................

.............................................................................................

.............................................................................................

03.தொலைபேசி இலக்கம்:...................................................................

04. மின்னஞ்சல் முகவரி:....................................................................

05. மணியோடர் . காசோலை அல்லது வங்கி வைப்பு சீட்டு விபரம்

..................................................... .....................................................

.................................... ....................

கையொப்பம் திகதி


கருவி சைன்
திரவ சலவை சவர்க்காரம்
4in1
கருவி
Shine
Detergent Liquid
500ml
300ml
கருவி சைன்
4in1
சிறப்புக்கள்
❖ தரமான உற்பத்தி
❖ நீண்டகாலப் பாவனைக்கும், நறுமணத்துக்கும்
❖ சாதாரண மற்றும் இயந்திர சலவைக்கு
❖ மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்தைப் பேண

கல்வித்துறையில்
தமிழ்மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு
உற்சாக வழிகாட்டும்

# எவகிறீன் வெளியீட்டகத்திலிருந்து...

# இதோ!




## புதிய வெளியீடுகள்..

**க.பொ.த (உயர்தர)**
**வகுப்பு மாணவர்களுக்கான**

# உயிரியல்

மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டம்

**தா.பாலசுப்பிரமணியம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)
கல்வி அமைச்சு
வடக்கு மாகாணம்
யாழ்ப்பாணம்.
**அவர்கள் எழுதிய**

**அலகு - 1, 2**
**உயிரியலுக்கான அறிமுகம்,**
**உயிரின் இரசாயன கல அடிப்படை**

**அலகு - 3**
**அங்கிகளின் கூர்ப்பும் பல்வகைமையும்**

**அலகு - 4**
**தாவர அமைப்பும் தொழிலும்**

**அலகு - 5, பகுதி - 1, 2**
**விலங்கு அமைப்பும் தொழிலும்**

**அலகு - 6**
**பிறப்புரிமையியல்**

**இப்பொழுது சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கிறது.**

**உங்களது தேவைகளுக்கும் மற்றும் விபரங்களுக்கும்**

**021 221 9893 / 0777 1414 44**

**எவகிறீன் வெளியீட்டகம்,**
693, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எவகிறீன் அச்சகம், இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893